"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக்காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்" தாபிதம்: 1876

சத்தியவேத
# பாதுகாவலன்

தந்தி: "கதலிக் பிறஸ்" யாழ்ப்பாணம். தொலைபேசி: 300
REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

87-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1962-ம் ஆண்டு ஐப்பசி மீ 6-ந் திகதி சனிக்கிழமை — பிரதிசதம் 10 | 40-ம் இலக்கம்

# ஐப்பசி 11 பொதுச்சங்க ஆரம்பதினம்

வாளுக்கஞ்சார், வசை சொற்களுக் கஞ்சார், எம்
வேந்தர் அஞ்சார்,

வஞ்சனை சூழ்ச்சிக் கஞ்சார், இவர்
வானம் தான் இடிந்து விழ்கின்ற போதிலும்

விரமுடன் சாட்சி பகர்ந்திடுவார்
வேந்தரின் வேந்தனுக்கு

வாழ்க
கிறிஸ்துவின் பிரதிநிதி!

வளர்க
அவர் திருப்பணி!



### பாதுகாவலன் பாராட்டுகிறான்

- ஆண்டில் முதிர்ந்தும் ஆண்மையில் தளர்ச்சியுருது துணிவுடன் சங்கம் கூட்டும் அருளப்ப பாப்பரசரை......

✳

- திருச்சபைத்தலைவரின் அழைப்புக்கு மதிப்பளித்து, பிரமாணிக்கமுடன் ஒத்துழைக்க ரோம்நகர் செல்லும் ஆயர்களை ......

✳

- பலமாதகாலமாக அயராது, அலுப்புருது ஆயத்தவேலைகளை ஊக்கமுடன் நடாத்திவரும் பொதுச்சங்க நிர்வாக குழுவினரை ......

✳

- அன்புத்தந்தையின் வேண்டுகோளுக்கிணங்க, பொதுச்சங்க சித்திக்காகச் செபதப முயற்சிகளை மேற்கொண்டுவரும் கத்தோலிக்க மக்களை ......

✳

- சங்கத்தின்மேல் நல்லெண்ணமும், பரஸ்பர அன்புங்காட்டி, ஆதரவும் நல்கும் சகோதர கிறிஸ்தவ திருச்சபையினரை ......

## 2-ம் வத்திக்கான் பொதுச்சங்கம்

### இதன் அவசியம் என்ன?

பரிசுத்த திருச்சபையானது ஆதியில் யேசுநாதர் உண்டாக்கியபோது தூய்மையும் பலமுமுடையதாய் விளங்கியது. ஆனல், காலம் போகப்போக ஏற்பட்ட பலவகை இன்னல்களினுல் அது சிலகாலங்களில் பலம்குறைந்து, ஆதியில் இருந்த ஒளிமங்கி இருந்தது. தப்பான விளக்கங்கள் எழுந்தன. தான்தோன்றிச் சீர்திருத்தவாதிகள் அதன் ஒற்றுமையைக் குலைத்தனர். திருச்சபையின் வாழ்வில் ஏற்பட்ட கடும் புயல்களிலிருந்து கிறிஸ்துநாதரின் போதனைகளைக் காத்துக்கொள்வதும், கொந்தளித்த உலக கடலிலே பேதுருவின் திவ்விய வள்ளத்தை மோட்சதுறை நோக்கி இட்டுச் செலுத்துவதும் கடமையாகஉள்ள திருச்சபையின் பாப்பரசர்கள் இடுக்கண்மிக்க அக்காலங்களில் பொதுச்சங்கங்களைக் கூட்டி யேசுக்கிறிஸ்துநாதரின் போதனைகளை அன்றுபோல் என்றும் கட்டிக் காத்துவந்தனர்.

கர்த்தரின் கிருபையினுல் எமது பாப்பரசராக இன்று இருக்கும் அரியதந்தை 23-ம் அருளப்பர் பாப்பரசராகத் தெரிந்தெடுக்கப்பட்ட இந்நாட்களுள் இக்காலத்தின்கோலத்தை நன்கு அறிந்தவராய், பொதுச்சங்கம் ஒன்று கூட்ட வேண்டுமெனத் தேவ அருளினுல் உதிகொண்டார். 20-ம் நூற்றுண்டில் உலகில் எற்பட்டிருக்கும் பலவகை மாற்றங்கள் திருச்சபைக்கு ஒரு புதிய சூழ்நிலையை ஏற்படுத்தி இருக்கின்றன. அரசாங்கங்களுக்கும் திருச்சபைக்கும் இடையில் இருந்துவந்த நல்லுறவு குறைந்துவிட்டது. கிறிஸ்தவ பண்பாட்டுக்கு இதுவரையும் இருந்த உயர்மதிப்பு அருகிவிட்டது. திருச்சபையின் வளர்ச்சிக்கு உதவியாய்இருந்த மேல்நாட்டு ஆட்சி மறைந்துவிட்டது. மறுசமயங்கள் தற்கால முறைகளுக்குத்தக தமது பழைய பண்பாடுகளைப் புனருத்தாரணம் செய்துகொண்டு கிறிஸ்தவ பண்பாட்டை எதிர்க்கின்றன — பலதேசங்களில் கத்தோலிக்க வேதத்துக்கு எதிராக அடக்குமுறைகள் நிலவிவருகின்றன — அரசாங்கங்களினுல் ஏற்படும் இன்னல்கள் ஒருபுறம், பொதுஉடைமைக் கொள்கைக்காரரின் அட்டகாசங்கள் மறுபுறம். இவற்றைவிட விசுவாசிகளின் வேத அநுசரணைகளுக்கும் இடையூறுகள் மலிந்துவிட்டன. கிறிஸ்துவைப் பின்பற்றுகிறோம்என்று சொல்லிக் கொள்ளும் பலபிரிவினர் பரஸ்பர ஒத்துழைப்பின்றி, முறையான தலைமையின்றி, ஞான உயிரின்றி வாடிவதங்குகின்றனர். இத்தகைய சூழ்நிலையில், ஒருவகை ஒழுங்கு காணவேண்டியதன் அவசியத்தை உணர்ந்து நமது பரிசுத்த பாப்பரசர் பொதுச்சங்கத்தைக் கூட்டுவது அவசியமெனக்கண்டுகொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




என் செல்வச் சிறுவர்களே! உங்களுக்கு என் அன்பு கனிந்த வணக்கம்.

சென்ற வாரத்தில் ஒரு நாள் சாயங்காலம் நான் கடற்கரை ஓரமாக உலாவச் சென்றேன். கடற்கரையில் இருந்த ஒரு பெரிய கல்லின்மேல் அருள் என்னுஞ் சிறுவன் தனிமையாக மனவாட்டத்துடன் உட்கார்ந்திருந்தார். நான் அவர் அருகிற்போய் "தம்பி ஏன் துக்கமாக இருக்கிறீர்"? என்று கேட்டேன். அதற்கு மறுமொழியாக அவர் பின்வருங்கதையைச் சொன்னார்.

அண்ணா! நான் இன்று சாயங்காலம் பாடசாலைமுடிந்து வீட்டுக்குவந்தேன். சிற்றுண்டி சாப்பிட்டுவிட்டு என்னுடைய பெரிய பந்தை எடுத்து வீட்டுமுற்றத்தில் நின்று காலால் அடித்து விளையாடிக்கொண்டிருந்தேன். நான் பந்தை அடித்துக்கொண்டிருக்கும்போது பந்து விருந்தையில் தொங்கிக்கொண்டிருந்த மின்சாரவிளக்கில் பட்டது பந்து விசையாக விளக்கில்பட்டதால் அது சுக்குச்சுக்காக உடைந்து கீழே விழுந்தது. சமையல் அறையில் இருந்த எனது அம்மா சத்தங்கேட்டு வெளியேவந்தார். விளக்கு உடைந்து கீழே விழுந்திருப்பதைக்கண்டார். மிகுந்த கோபத்துடன் என்னைத் திட்டினார். என்னைத் தண்டிப்பதற்காகக் கூப்பிட்டார். நான் பயத்தினால் அங்கு நில்லாமல் ஓடிவந்துவிட்டேன். பின்னர் என்ன செய்வது என்று தெரியாது இங்குவந்து தனிமையாக இருக்கிறேன் என்று சொன்னார்.

இக்கதையைக் கேட்டபின் நான் அவருக்குச்சொல்லியவற்றை நீங்களுங் கேளுங்கள். அம்மா உம்மைக் கோபித்துத் திட்டினார் என்று சொன்னீர். அம்மா உம்மில் உள்ள வெறுப்பினால் உம்மைக் கோபித்துத் திட்டவில்லை. உம்மை அவர் நேசிக்கிறார். ஆனால், நீர் செய்த குற்றத்தை அவர் வெறுக்கிறார். அவருடைய கோபத்துக்குக்காரணம் நீர் செய்த குற்றம். குற்றத்தைத்தான் அம்மா வெறுக்கிறார்—கோபிக்கிறார் உம்மைஅல்ல.

அதேபோலத்தான் கடவுளும், பாவியை அல்ல, பாவத்தை வெறுக்கிறார். கடவுள் பாவத்தை வெறுக்கிறார். ஆனால், பாவியின்மட்டில் இரக்கமும், அனுதாபமும் கொள்ளுகிறார். பாவி தன் பாவத்துக்காகத் துக்கப்பட்டு மன்னிப்புக் கேட்கவேண்டுமென்று அவர் ஆசிக்கிறார். பாவி தான்செய்த குற்றத்தை உணர்ந்து மனஸ்தாபப்பட்டு, இனிமேல் பாவத்தைச் செய்யமாட்டேன் என்ற பிரதிக்கினையுடன் பொறுத்தல் கேட்கவேண்டுமென்பது கடவுளின் விருப்பம். எனவே, எங்களுக்குத் துன்பத்தை வரவிடும்பொழுதும் கடவுளின் அன்பு மாறுவதில்லை.

ஆதலால் தம்பி அருள், நீர் வீட்டுக்குப்போய் அம்மாவிடம் துக்கத்துடனும் நல்லபிரதிக்கினையுடனும் மன்னிப்புக்கேளும். அப்போது அம்மா உம்மை மன்னிப்பார் என்று அவரை அவர் தாயாரிடம் அனுப்பிவைத்தேன்.

அன்புள்ள அண்ணா.

# எறும்பு இராச்சியம்

(முன் தொடர்ச்சி)

**பயங்கர எறும்புகள் :**

மாரபூண்டா, எகிடன், சாலமன் என்பன இராட்சத எறும்புகள். இவை போர்ப்படை எறும்புஇனத்தவை. இந்த எறும்புகள் வரும் வழியில் எது இருந்தாலும் அத்தனையையும் தின்றுமுடித்துவிடும். இவை இலட்சக்கணக்கில் பல மைல்கள் நீளத்துக்குப் படைஎடுத்து வரும். வழியில் மரம், செடி, வீடுவாசல் எதையும் கடித்து நாசமாக்கி உருத் தெரியாமல் செய்துவிடும் ஆற்றல் இவைக்கு உண்டு. இவைகளிடம் ஒருமனிதன் அகப்பட்டுவிட்டாலோ சற்றுநேரத்துக்கெல்லாம் அவனுடைய எலும்புக்கூடுதான் மிச்சமாக இருக்கும். எறும்புதின்னி என்ற மிருகங்களையே மாரபூண்டா என்னும் எறும்பு கொன்றுதின்றுவிடும். இவை வெள்ளம்,புயல்போலத்தான் படைஎடுத்து வரும். இப்பயங்கர எறும்புகள் வருவதற்கு அறிகுறியாகப் பறவைகள் கீச்சொலியைக்கேட்கலாம். இந்த எகிடன்என்ற போர்ப்படை எறும்புகள்எல்லாமே குருட்டு எறும்புகளாம். பல ஆயிரம்வருடங்களுக்கு முன்னரே அவற்றின் பார்வை கெட்டுவிட்டதாம். வாசனையை உணர்ந்துகொள்ளும் உணர்ச்சிக் குழல்களின் சக்தியினால் இவை எங்கும் போகமுடிகிறது.

**தேன்சட்டி எறும்புகள் :**

வடஅமெரிக்காவில் மெக்சிக்கோ நாட்டிலும், ஆஸ்திரேலியா, தென் ஆபிரிக்கா, தென் அமெரிக்கா என்னும் தேசங்களின் சில பாகங்களிலும் தேன்சட்டி எறும்புகள் என்று ஒருவகை எறும்புகள் வாழுகின்றன. இவை நமது ஊர்களிலுள்ள கட்டெறும்புகளைப் போன்றவை. இவை காட்டில் உள்ள மலர்களின் தேனைக் குடித்து அதைத் தங்கள் இடுப்புக்குக் கீழே உள்ள சவ்வுப் பையில் நிறைத்துக்கொள்ளுகின்றன. இச் சவ்வுப்பைகள் கழற்சிக்காய்ப் பருமனுக்குப் பருத்துவிடுகின்றன. இத் தேன்சட்டிஎறும்புகள் பலூன்போல் ஊதிய வயிற்றோடு அடையடையாகத் தொங்கிக் கொண்டிருக்கும் காட்சி,காணவிநோதமாக இருக்கும். வயிற்றின்மேல் உள்ள கறுப்புப் பட்டைகள் விலகிஇருக்கும். வயிற்றில் சேகரிக்கும் தேன் மாரிகால உணவாக உதவுகின்றன. தேன் அகப்படாத காலங்களில் பெரிய எறும்புகள் சேகரித்த தேனைச் சிறியஎறும்புகள் குடித்துச் சீவிக்கின்றன. வயிற்றில் தேன் இருப்பதால் இவற்றிற்கு எப்போதும் ஆபத்துத்தான், அந்நாட்டு மக்கள் இந்த எறும்புகளைப் பிடித்துத் தலையைக் கிள்ளிவிட்டு, கொத்து, சேர்களினால், நம்நாட்டில் கடலை, நாவற்பழம், ஈச்சம்பழம், பாலைப்பழம் அளந்து விற்பதுபோல விற்கிறார்கள். தேன்சட்டி எறும்புகளைக் கொண்டு [illegible] வழங்கிறார்கள்.

**எறும்புப்பாஷை :**

எறும்புகளும் பேசுகின்றன. அவற்றின் பேச்சு, பாஷை எமக்கு விளங்காது. அவை ஒன்றை ஒன்று சந்திக்கும்போது ஆண்டெனா என்னும் கொம்புபோன்ற தம் உணர்ச்சி உறுப்புகளை ஒன்றுக்கொன்று உரசிக்கொள்வதனால் பேசுகின்றன. ஸ்பரிச உறுப்பினால் தலையையோ, வேறு உறுப்பையோ தொட்டுப் பேசும்.

**மனோதிடம் :**

எறும்புகளின் மனோதிடமும், ஒற்றுமையும் வியப்பளிக்கும். ஒரு ஓடையைக் கடக்கவேண்டுமானால், தாங்களே ஒன்றை ஒன்று மடித்துப் பாலம் அமைத்துக்கொள்ள, மற்றவை அந்தப்பாலத்தின் உதவியினால் ஓடையைக் கடக்கின்றன. நீரின் வேகம் அதிகமானால், நீரினுள் இறங்கி, உள்ளே உள்ள தாவரங்களைப்பிடித்துக்கொண்டு, நீரில்மூழ்கியபடி பாலம் அமைத்து விடுகின்றன. நீரில்மூழ்கி உயிர் மடிவதற்கும் அவை அஞ்சுவதில்லை.

எறும்புகள் உணவு சேகரிக்கும் காட்சியும் கண்கொள்ளாக் காட்சியாகின்றது.



எவ்வளவு
பெரிய முயற்சி!

எத்துணைத்திட்டம்

எவ்வளவு
பணச்செலவு!

சங்கம் வெற்றி
யடையாவிடின்
அனைத்தும் வீண்.

பொதுச் சங்கத்தின் தோல்வி
திருச்சபையின் தோல்வி.

ஆகவே,
செபிப்போம் சங்கத்தின் சித்திக்காக.

**எறும்பு விரோதிகள் :**

எறும்புகளுக்கு விரோதிகள் நிறைய உண்டு. எறும்புகளை உயிரோடு பிடித்துத்தின்னும் செந்துக்களும் உண்டு; மிருகங்களும் உண்டு. பூச்சி உலகில் உள்ள சாமர்த்தியமான செந்து எறும்புகளைப் பிடித்துத்தின்னும்விதம் மிகவும் ரசமானது. இதற்குப் பெயர் எறும்பு தின்னிச் சிங்கம். இவை மிதசீதோஷ்ண நாடுகளிலே வசிக்கின்றன. இந்தச்சிங்கத்தில் வேறு ஒருவகையும் உண்டு. இவை எகிப்திலே வசிக்கின்றன. அடுத்த விரோதி கறையான். கறையான்களுக்கு எறும்புகளுடன் போராடச் சக்தியில்லை. ஆகவே, இயற்கையாகவே ஒருவகைப்பசை கறையான்களுக்குண்டு. எறும்புகள்மீது அப்பசையைப்பீச்சி நனைத்து விடுகின்றன. அப்பசை காய்ந்ததும், எறும்பு தன் உடலை அசைக்காது கிடந்து விடுகிறது.

**திருட்டு எறும்பு :**

எறும்புகளிலேயே எறும்புகளைத் தின்றுவாழும் எறும்புகளும் உண்டு. இவற்றுக்குத் திருட்டு எறும்புகள் என்று பெயர், உருவத்தில் சிறியவை. மரஎறும்புகளின் வளைச்சுவர்களில் ஒழிந்து வாழுகின்றன திருட்டு எறும்புகள். மரஎறும்புகள் இரை தேடப் புறப்படும் சமயம், இவை அவற்றின் வளைகளில் புகுந்து உணவுப் பதார்த்தங்களையும், முட்டை, குஞ்சுகளையும் திருடிக் கொண்டுபோய் விடுகின்றன.

**எறும்பின்பயன் :**

எறும்புகள் அசுத்தங்களை அப்புறப்படுத்த உதவுகின்றன. நிலத்தை வளம்படுத்தவும் உதவுகின்றன. நமதுவிரோதியான கறையான்களை ஒழித்துக்கட்ட உதவுவதும் எறும்புகள்தாம். ரசாயனத்தொழிலுக்கு வேண்டிய 'பார்மிக் அசிட்' தயாரிக்கப்படுவது எறும்புகளைக் காய்ச்சித்தான். சிலவகை எறும்புகளின் முட்டைகள் மருந்தாகப் பயன்படுகின்றன.

அமெரிக்காவின் பூர்வகுடிகளான செவ்விந்தியருக்கு எறும்பு என்றால் விருந்துச்சோறுமாதிரி. ரணசிகிச்சைசெய்வதற்கும் அவர்கள் எறும்புகளைப்பயன் படுத்துகிறார்கள். இலைகளை வெட்டும் சாபா என்ற எறும்பே ரணசிகிச்சைக்கு உதவுகிறதாம்.

## நற்சிந்தனை

உன் ஆத்துமத்துக்குக் கேடுவிளைவிக்கக்கூடியவற்றை ஒருபோதும் வாசியாதபடி விழிப்பாயிரு. தற்காலப் பிரசுரங்களில் அநேகம் மனதைக் குழப்பக்கூடியவை; ஆபாசமானவை; ஆத்துமத்தை, அவை கறைப்படுத்துகின்றன. அவற்றை நீ வாசிப்பாயானால் உன் விசுவாசத்தையும், கற்பையும் காப்பாற்றுவது முடியாத காரியம். காதற்கதைகள் வாசிப்பதாலும் சிற்றின்ப ஆசையைத் தூண்டும் சினிமாக்கள், நாடகங்கள் பார்ப்பதாலும், நாஸ்திகப் பத்திரிகைகள் வாசிப்பதாலும், ஆபாசமான படங்கள் பார்ப்பதாலும் ஏற்படும் துர் எண்ணங்கள் ஆத்துமத்துக்குத் தீமை செய்வது நிச்சயம்.

கெட்ட பிரசுரங்களை வாசியாதிருந்தால் மாத்திரம் போதாது. சமய, சன்மார்க்க பிரசுரங்களையும், சிறப்பாக ஞான வாசகநூல்களையும் வாசிக்கும் வழக்கத்தை ஏற்படுத்திக்கொள்ளவேண்டும். ஒவ்வொரு நாளும் சிறிதுநேரம் ஞானவாசினை நூல்களை வாசிப்பது நன்று. ஒரு நல்லபுத்தகத்தை நீ வாசிக்கையில் பரலோககாரியங்களை உனக்கு எடுத்துரைக்கும் கடவுளுக்குச் செவி கொடுக்கிறாய் என்று அறிந்து கொள். ஞானவாசினைக்காக நீ செலவு செய்த நேரம் ஒருபோதும் அவம்போகாது.


## மசிக்கோ ஸ்தாபனம்

**அலுவலகமும் காட்சிசாலையும் :**
3, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7170

**தொழிற்சாலை :**
76, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 670

உங்கள் கோவில்களை இருளிலே ஒளி வீசச்செய்யும் நியோன் சிலுவைகள் எங்களிடமுண்டு.

விவசாய, விஞ்ஞான எந்திரங்களும் உப உறுப்புகளும் பல தினுசுகளிலும் நியாயமான விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

ஒருமுறை விஜயஞ் செய்க.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம் மேற்றிராணியாண்டவரின் ரோமாபுரிப் பிரயாணம்

வத்திக்கான் பொதுச்சங்கத்துக்குச் சமுகமளிக்குமுகமாக நம்மேற்றிராணியாண்டவர்அவர்கள் சென்ற வியாழக்கிழமைகாலை விமானமார்க்கமாய் உரோமாபுரி செல்லலாயினர். அவர் யாழ்ப்பாணத்திலிருந்து புறப்படுமுன் சென்ற ஞாயிற்றுக்கிழமை காலை 7-15மணிக்கு ஆசனக்கோவிலிலேநிறைவேற்றிய திவ்வியபூசையில் வத்திக்கான் பொதுச்சங்கத்தைப்பற்றிய இருஉண்மைகளைத் தெளிவாக எடுத்துக்காட்டித் தமதுஆசி வழங்கலாயினர். பின்னர் அன்று பிற்பகல் 2மணிக்குக் குருமாரும், மற்றும் பிரமுகர்களும் வழியனுப்பிவைக்க மருதமடுத் திருப்பதிசென்று, மாதாவின் அருளை இரந்துகொண்டு கொழும்புக்குச் செல்லலாயினர்.

# சிங்களமகானின் அறிவுரை

கழுத்துறையைச்சேர்ந்த றெட்டியல-கோவின்ன கிராமாபிவிருத்திச் சங்கத்தின் பொதுக்கூட்டம் சென்ற வியாழக்கிழமை நிகழ்ந்தபோது அதற்குத் திரு. வில்மட் பெறேரு அவர்கள் தலைமைவகித்துப் பேசுகையில்: "இலங்கையிலுள்ள இந்தியர்களுக்குச் சமஉரிமையும், சுதந்திரங்களும் வழங்கப்படவேண்டும்; அவர்களை இலங்கையிலிருந்து வெளியேயேற்றிவிடமுயல்வது பெரிதும்நியாயமற்ற ஒருசெயலாகும்; மொழிப்பிரச்சினையும், இந்தியர்பிரச்சினையும் நியாயமானமுறையிலே சுமுகமாகத் தீர்க்கப்படாதவரை இங்கே ஓர்அரசாங்கத்தை வெற்றிகரமாகக் கொண்டு நடத்துவது கஷ்டமாகும்; அரசாங்க மதம்ஒன்றை ஏற்படுத்துவதை நான் விரும்பவில்லை, மதத்திற்கு முதலிடம் அளிக்கப்பட்டமையாலேயே பர்மாவில் இராணுவ சர்வாதிகார ஆட்சி ஏற்படலாயிற்று; மக்கள் சாகிய, மத வேற்றுமைகளைமறக்க முயலவேண்டும்; ஏனையமதங்களுக்கும் அவற்றிற்குரியஇடம் கொடுபடவேண்டும்; தமிழ் புறக்கணிக்கப்பட்டுச் சிங்களம் மட்டும் அரசகரும மொழியாயிருப்பதை நான் ஏற்றுக்கொள்ளவில்லை; தமிழுக்கும் அதற்குரியஇடம் அளிக்கப்படவேண்டும்" எனக் கூறியிருக்கின்றார்.

## உதவி மந்திரியின் இராசிநாமா

தொழில் - தேசியமயசேவை மந்திரியின் பாராளுமன்றக் காரியதரிசியான திரு. யு. பி. வீரசேகரா சென்ற வியாழக்கிழமை தனது பதவியை இராசிநாமாச் செய்யலாயினர். இவர் அன்றுதினம் தனது இராசிநாமாக் கடிதத்தைக் கவர்னர்—ஜெனறலிடம் சமர்ப்பித்துவிட்டுப் பிரதமரையும் சந்தித்துக்கொண்டு திரும்பலாயினர்.

## புசலுக்கு இரண்டுகூப்பன்

உத்தரவாத விலைத்திட்டத்தின்கீழ் அரசாங்கம் வாங்குகின்ற ஒவ்வொரு புசல் நெல்லுக்கும் இரண்டுஅரிசிக் கூப்பன்கள் வீதம் விவசாயிகளிடமிருந்து திரும்பப்பெறுதற்கான திட்டமொன்று செய்யப்படவிருக்கிறது. இதன்மூலம் மொத்தமாக நான்குகோடி அரிசிக்கூப்பன்கள் கிடைக்குமென்றும், 3கோடியே 5 இலட்சம்ரூபாவுக்கு வெளிநாட்டுச் செலாவணி மிச்சப்படுமென்றும் மதிப்பிடப்படுகிறது. நெல்செய்கை பண்ணும் விவசாயிகள் உத்தரவாத விலைத்திட்டத்தின்கீழ் கூட்டுறவுச்சங்கங்களுக்கு நெல்விற்கும்போது தாங்களாகவலியத் தங்களிடமுள்ள அரிசிக்கூப்பன்களைத் திருப்பிக் கொடுக்கும்படியான திட்டத்தை இம்மாத முதல் நடைமுறைக்குக் கொண்டுவர அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது.

## முன்னாள் நிதிமந்திரி

பங்கீட்டரிசியிலே அரைப்படிஅரிசியை வெட்டிக்குறைக்கும் தீர்மானத்தை அரசாங்கம் கைவிட்டதைத் தொடர்ந்து சென்ற ஆவணிமாதம் 27-ந்திகதியன்று நிதிமந்திரிபதவியிலிருந்து விலகிக்கொண்ட திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா அதுமுதல் பிரதமரின் பாராளுமன்றக் காரியதரிசியாகவும், பாதுகாப்பு-வெளிநாட்டு விவகாரமந்திரியின் பாராளுமன்றக் காரியதரிசியாகவும் கடமையாற்றிவந்தார். தற்போதுஇவர் பாராளுமன்றக் காரியதரிசிபதவியையும் இராசிநாமாச் செய்திருக்கின்றார். இனிமேல்இவர் சனப்பிரதிநிதிகள் சபையிலே ஒருசாதாரண எம். பி. யாகப் பின்வரிசையிலே தமது முன்னாள் உதவிநிதிமந்திரி திரு. ஜோர்ஜ் இராஜபக்ஸவின்அருகில் ஆசனம்வகிப்பாரெனத் தெரியவருகிறது.

# பங்கீட்டரிசிக்குப் பங்கமில்லை

தற்போது ஆளுக்கு வாரம்ஒன்றுக்கு இரண்டுகொத்துவீதம் வழங்கப்பட்டுவரும் பங்கீட்டரிசியைத் தொடர்ந்துகொடுக்க முடியாதநிலை இப்போதோ அன்றேல் இனிமேலோ ஏற்படக்கூடுமென்று அஞ்சுவதற்குக் கிஞ்சித்தேனும் இடமில்லையென்று அரிசிநிலைமை பற்றி மந்திரிகள்கூடி ஆராய்ந்தபின் தெரிவித்திருக்கிறார்கள். அடுத்தவருடம் மாசிமாதம்வரை தொடர்ந்து இரண்டுகொத்து அரிசி கொடுத்துவரக்கூடியதாகக் கையிருப்புநிலை திருப்திகரமாய் இருக்கின்றது. அதற்குள் 1963-ம்ஆண்டு ஒப்பந்தப்படி பர்மா, சீனுவாகிய நாடுகளிலிருந்து அரிசிக்கப்பல்கள் இங்கு வந்து சேரவிருக்கின்றன. இந்த அரிசியுடன் வருகிற பங்குனி முதல் மாதந்தோறும் 30,000 தொன் அரிசி வீதம் உத்தரவாதவிலைத் திட்டத்தின்கீழ் உள்நாட்டுஅரிசி வாங்கப்படவிருக்கிறது.

## சம்பத்திரிசியார் கல்லூரிப் பரிசளிப்புவிழா

சம்பத்திரிசியார்கல்லூரி வருடாந்த பரிசளிப்புவிழா சென்ற புரட்டாதி மாதம் 25-ந்திகதி வெகுசிறப்பாக நடந்தேறியது. நமதுஆயர் மேன்மைதங்கிய ஜே. எமிலியானுஸ்பிள்ளை ஆண்டவர்அவர்கள் விழாவுக்குத் தலைமைதாங்கினர். யாழ்ப்பாண அரசாங்கஅதிபர் திரு. வி. பி. வித்தாச்சிஅவர்கள் பிரதம விருந்தினராகச் சமுகங்கொடுத்து, உரைநிகழ்த்தினர். வருடாந்தஅறிக்கை கல்லூரிஅதிபர் வண. பி. ஜே. ஜீவரத்தினம் சுவாமியவர்களால் வாசிக்கப்பட்டது. திருமதி வித்தாச்சி பரிசுப்பத்திரங்களை வழங்கினர். கல்லூரிப் பாலர்களால் நடிக்கப்பட்ட நடனங்களுடனும், சிலபாடல்களுடனும் விழா இனிதே நிறைவெய்தியது.

## 2-ம் வத்திக்கான் திருச்சங்கத்தின் சித்திக்காகச் செபம்

திவ்விய இஸ்பிரீத்துசாந்துவே! உமது பிரசன்னத்தினாலும், உறுதியான வழிநடத்துதலினாலும் திருச்சபையோடு என்றுமிருக்கும்படி யேசுவின் நாமத்தினால் பரமபிதாவினால் அனுப்பப்பட்டவரே! திருச்சபையின் பொதுச்சங்கத்தின்மேல் உமது நிறைவான வரங்களைப் பொழிந்தருளும்படி தேவரீரை இரந்து மன்றாடுகிறோம்.

எமது மதுரமான ஆறுதலும், ஆசிரியருமானவரே! பரிசுத்த பாப்பரசரின் அழைப்புக்கிணங்கி உரோமாபுரியில் திருச்சங்கங்கூட மகிழ்ச்சியுடன் வந்துசேரும் ஆயர்களின் மனதுகளை உமது தெய்வீக பிரகாசத்தால் நிரப்பியருளும்.

இத்திருச்சங்கத்தின் விளைவாகச் சுவிசேஷத்தின் ஒளியும், பலமும் உலகமக்களிடையே அதிகமதிகமாய்ப் பரவவும், கத்தோலிக்கவேதமும் அதைப்பரப்பும் பணியும் இனிதே வளம்பெறவும், திருச்சபையின் போதனையும், நல்லொழுக்க வழிகாட்டுதலும் எல்லோராலும் பூரணமாய் ஒப்புக்கொள்ளப்படவும் வேண்டுமென்று தேவரீரை மன்றாடுகிறோம்.

எமது ஆத்துமத்தின் மதுரமான வழிகாட்டியே! நாங்கள் மனத்தாழ்ச்சியும், அமைச்சலும் உள்ளவர்களாயிருக்கவும் திருச்சங்கத்தின் முடிவுகளை நன்றிநிறைந்த மனதுடன் ஏற்று, அனுசரிக்க ஆசைப்படவும் எங்கள் மனதைச் சத்தியத்தில் உறுதிப்படுத்தியருளும்.

கிறிஸ்துநாதருடைய பெயரில் பெருமை பாராட்டிக்கொண்டு அவரால் நிறுவப்பட்ட ஏகமந்தையைவிட்டு இன்னும் பிரிந்து நிற்பவர்கள் கடைசியாய் ஒரே மேய்ப்பனின்கீழ் ஒற்றுமையைக் கண்டடையச் செய்தருளும்படி மன்றாடுகிறோம்.


முன்னொருநாள் பெந்தெக்கோஸ்துதினத்தில் தேவரீர் புரிந்த அற்புதங்களை எங்கள் காலத்திலும் இன்னொருமுறை செய்தருளும்படி கெஞ்சி மன்றாடுகிறோம். உமது திருச்சபை யேசுநாதருடைய தாயாரான பரிசுத்த கன்னிமரியம்மாளுடன் தளராத வேண்டுதலில் ஒன்றித்திருப்பதாலும், அர்ச். இராயப்பரின் வழிகாட்டுதலைப் பின்பற்றுவதாலும், எமது திவ்விய இரட்சகரின் இராச்சியம்—உண்மையினும், நீதியினும் அன்பினும் சமாதானத்தினும் இராச்சியம்—உலகெங்கும் பரவச்செய்தருளும் சுவாமி, ஆமென்யேசு.

குறிப்பு: இச்செபத்தைப் பத்தியுடன் செபிப்போர் அடையக்கூடிய பலன்களாவன:

1. பத்துவருட அபூரணபலன். (ஒவ்வொரு முறையும்)
2. நாள்தோறும் ஒருமாதமளவாகச் செபித்தால் (வழமையான நிபந்தனைகளுக்கிணங்க) ஒரு பரிபூரணபலன்.


விவசாயிகளே!

உங்கள் பயிர்ச்செய்கைகள்
பூரண வருவாயை அளிக்கவேண்டுமாயின்
குறைந்த செலவில் இயங்கக்கூடிய



குட் இனவ்

நீர் இறைக்கும் இயந்திரங்களைப் பாவியுங்கள்.
(பி. எஸ். ஏ. அல்லது வில்லியர்ஸ் இயந்திரங்கள் இணைக்கப்பட்டன)

விநியோகஸ்தர்கள்:

சிலோன் மேர்ச்சன்ஸ் லிமிற்றட்

ஸ்ரான்லி வீதி, — யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 234


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2-ம் வத்திக்கான் பொதுச்சங்கத்தில் திலங்கும் திருச்சபையின் இளவரசர்கள்

ஐப்பசித்திங்கள் 11-ந் திகதி நிகழவிருக்கும் 2-ம் வத்திக்கான் பொதுச் சங்கத்திற்காக ஒன்றுகூடும் மூவாயிரம் திருச்சபைத் தலைவர்களுள், நாம் என்றும் மெச்சத்தக்கவர்களும், தம் எசமானின் தொழிலை என்றும் திருப்திகரமாகச் செய்துமுடிக்கும் குறிக்கோளுடன், தம் நலங்கருதாது திருச்சபையின் வளர்ச்சியையும், அதன் முன்னேற்றத்தையுமே முன்னேக்காகக் கொண்டு அயராதுழைத்து வருபவர்களும், இன்னும் முக்கியமாகத் திருச்சங்கத்தில் முன்னணியில் திகழ்ந்து நிற்பவர்களுமான ஒன்பது கருதினல் ஆண்டகைகளைப்பற்றி, நாம் இங்கு சிறிது எடுத்தியம்புவோம். திருச்சபையின் ஏகத்துவத்தை உலகிற்கு எடுத்துக்காட்டும் இத்திருச்சங்கத்தில் முன்னணி வகிக்கும் கருதினல் ஆண்டகைகள் ஆசியா, ஆபிரிக்கா, அமெரிக்கா, ஐரோப்பா, அவுஸ்திரேலியா கண்டங்களினதும் அதன் அலுவல்களையும் முன்னிட்டு, பிரதிநிதித்துவம் வகிப்பர். என்றும்விட முக்கியமாக இந்நாட்களில் பெரும் பெரும் பிரச்சினைகள் திருச்சபையை எதிர்த்து நிற்கின்றன. ஆகவே, தற்போதைய பிரச்சினைகளுடன் உண்மையாகவே, நாள்தோறும் போராடிவரும் உன்னத வீரர்களைத் திருச்சங்கத்தில் முன்னணி வகிக்கத் தெரிந்துள்ளனர். எனவே, அவர்கள் திருச்சங்கத்தில் வகிக்கும் முக்கியத்துவத்தைக் கீழே வரைந்திடுவோம்.

**1. அதி மேன்மைதங்கிய கருதினல் ஜெரல் சில்வா கென்ரிகஸ் ஆண்டகை.**

லத்தீன் அமெரிக்கா, திருச்சபையின் விசுவாசிகளில் மூன்றிலொரு பாகத்தை அடக்கியுள்ளது. இங்கே வதிந்திருப்பவர்களில் அநேகர் எடுத்துரைக்க இயலாத வறுமையிலும், அறிவின்மையிலும் அமிழ்ந்தியுள்ளனர். தற்போது சமூக, ஆத்மீக பிரச்சினைகள் அபரிமிதமாக இருந்தும் "ஜெரல் சில்வா கடந்த சொற்ப வருடங்களுள் குருப்பிரசாதிப்பதவியிலிருந்து கருதினல் ஆண்டகையாக அமர்த்தப்பட்டது எல்லவரின் மனதிலும் ஆச்சரியத்தை உண்டுபண்ணுமோர் விடயமாகும். அவர் குருப்பிரசாதிப்பதவியிலிருந்து மேற்றிராணி ஆண்டவராக 1959லும், அதிமேற்றிராணியாராக 1961லும், கருதினல் ஆண்டகையாக 1962லும் நியமனஞ் செய்யப் பெற்றார்.

"எளிய குடும்பங்களின் குருப்பிரசாதி" என அழைக்கப்படும இவர் 1907-ம் ஆண்டு "சிலி"யிலுள்ள "தல்கா" எனும் பட்டினத்தில் பதினறு பிள்ளைகள் உள்ள ஒரு குடும்பத்தில் உதித்தார். 1938-ம் ஆண்டு குருப் பட்டாபிஷேகம் பெற்று 1939-ம் ஆண்டு தொடக்கம் 1945-ம் ஆண்டு வரையும் சந்தியாகோவிலுள்ள குருமடத்தில் பேராசிரியராக அமர்ந்தார். பின்பு, இரு சலேசியன் கல்லூரிகளுக்கு அதிபராகவும், 1951 தொடங்கி 1959 வரையும் சந்தியாகோவிலுள்ள சலேசியன் குருமடாதிபராகவும் தொண்டாற்றினர். அவரின் அயரா உழைப்பும், மக்கள்பேருள்ள அன்பும் அவரைக் கருதினல் பதவிக்கு உயர்த்தியது.

54 வயது முற்றுப்பெற்ற கருதினல் சில்வா மத்திய அமெரிக்காவிற்கும், தென் அமெரிக்காவிற்கும் ஒற்றுமையை வளர்க்கும் தொழிலில் திருச்சங்கத்தில் முக்கிய இடத்தைப் பெறுவார்.

**2. அதி மேன்மைதங்கிய கருதினல் கிறெகறி பீற்றர் அகஜியானியன் ஆண்டகை**

1960-ம் ஆண்டு புரட்டாசித்திங்கள் 20-ம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் இரத்மலானை விமான நிலையத்தில் இலங்கைச் சனசமுத்திரத்தில் ரூஷியக்கப்பல் மிதந்துசெல்வதுபோல் காட்சியளித்த கருதினல் அகஜியானியன் ஆண்டகையின் வருகையை நினைக்கும்போது அப்பெரியாரைப் பற்றி நாம் இங்கு எடுத்துக் கூறவேண்டிய அவசியமில்லை என எமக்குத் தென்படுகிறது. எனினும் இவ்விடத்தில் நாம் அவரை ஒதுக்கி வைக்க முடியாது.

விசுவாசப்பரப்புதல் சபையின் அதிபரான ஆண்டகை கிழக்கு ருஷியாவில் பிறந்து, 11-வது வயதில் குருமடம் சென்று, தமது கல்வித்திறமையால் ரோமாபுரியில் பல பட்டங்களைப் பெற்று, 1935-ம் ஆண்டு மேற்றிராணியாராக்கப்பட்டு 1937-ம் ஆண்டு ஆர்மேனிய மக்களின் பிதாவாகத் தெரிந்தெடுக்கப்பட்டார். 1946-ம் ஆண்டு இவர் கருதினல் பதவிக்கு உயர்த்தப்பட்டார். இவருடைய சகபாடியாகிய கருதினல் ஸ்பெல்மன் ஆண்டகையவர்கள் இவரை, "குருமாணவரெல்லோருள்ளும் மிகவும் அறிவு நிறைந்த தலைவன்" எனப் போற்றிப் புகழ்ந்தார். 66 வயதுள்ள ஆர்மேனியக் கருதினல் பன்னிரண்டு பாஷைகளைப் பேசிவருகிறார்.



அதி மேன்மைதங்கிய கருதினல் லோறியன் றுகம்வோ ஆண்டகை

விசுவாசப் பரப்புதற் திருச்சங்கத்தின் தலைவரான கருதினல் வேதபோதக நாடுகளிலுள்ள நாற்பது இலட்சம் மக்களைக் கண்காணித்து வருகிறார். பரிசுத்த தந்தை இவரை வேதபோதக நாடுகளின் குழுவின் தலைவராக நியமித்திருக்கிறார். ஐப்பசித்திங்கள் 11-ந் திகதி கூடும் 3000 திருச்சபைத் தலைவர்களுள் கருதினல் அகஜியானியன் ஆண்டகையின் முக்கியத்துவத்தை மக்கள் உள்ளங்கை நெல்லிக்கனிபோல அறிவார்கள்.

**3. அதி மேன்மைதங்கிய கருதினல் அகுஸ்தீன் பியா ஆண்டகை**

வரவிருக்கும் திருச்சங்கத்தின் அலுவல்களையும், அதன் குறிக்கோள்களையும் உலகிற்கு [illegible] ரென அஞ்ஞா[illegible]யின் அவர் கருதினல் பியா ஆண்டகையேயல்லாது வேறொருவரல்ல. கத்தோலிக்கரோவெனில், இவரை ஒற்றுமையை மூட்டிவளர்க்கும் கைதேர்ந்த வல்லுநர் எனப் போற்றுகிறார்கள்.

பத்துவயதுப் பையனாக இருக்கும்போது சுகயீனத்தால் அவர் உயிர் வாழ்வதை நினைத்தே, உறவினர் சந்தேகித்தனர். ஆயின் இன்று 82 வயதுள்ள கருதினல் பியா தனது இளைப்பாற்றிக்குத்தானும் நேரமின்றி ஒரு வருடத்திற்கு சராசரி 2200 கடிதங்கள் எழுதிவருவதுமல்லாமல், எண்ணற்ற பேருரைகளும் கூட எடுத்து இயம்பி வருகிறார். சர்வகலாசாலையின் பலவருட வேதாகமப் படிப்பு, இவரைக் கைதேர்ந்த அஞ்ஞான வல்லுநர்களுடன் தொடர்பை உண்டுபண்ணலாயிற்று. 1917-ம் ஆண்டில் ஒல்லாந்தில் பேராசிரியராகப் பணியாற்றியபின்பு, 1930 தொடக்கம் 1949 வரையும் ரோமாபுரி வேதாகம கலாசாலையில் அதிபராகவும் தொண்டாற்றினர். இவரே 11-ம், 12-ம பத்திநாத பாப்பரசர்களின் பாவசங்கீர்த்தனக் குருவானவராக அமைந்திருந்தார்.

திருச்சங்கத்தில் கிறிஸ்தவர்கள், பார்வையாளர்களாகப் பங்குபற்றக் கூடியவிதமாக முன்னேற்பாடு செய்துள்ள கருதினல் பியா ஆண்டகை அவர்கள் "தப்பெண்ணங்களை அகற்றுவதும், பிறர் சிநேகத்தை அனுஷ்டித்து வருவதுமே கிறிஸ்துவ ஒற்றுமையின் அத்திவாரங்களாகும்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

**4. அதி மேன்மைதங்கிய கருதினல் பேர்ஞட் ஜான் அல்ஃவிறின்க் ஆண்டகை**

திருச்சங்கத்திற்கு வேண்டிய நிகழ்ச்சி நிரலை வரைவதின் பொருட்டு ஒன்று சேர்ந்த, கடந்த மத்திய ஆயத்தக்குழு 102 அங்கத்தவர்களைக் கொண்டிருந்தது. அதில் 60 கருதினல்மார், [illegible], 27 அதிமேற்றிராணிமார், [illegible] மேற்றிராணிமார், 4 சந்நியாச சபை அதிசிரேஷ்டர்கள் அடங்கியுள்ளனர். அதில் கருதினல்மார் மாத்திரம் 29 தேசங்களினதும், ஐந்து கண்டங்களினதும் அலுவல்களையிட்டுப் பிரதிநிதித்துவம் வகிக்கின்றனர்.

மத்திய ஒல்லாந்தில் முக்கியத்துவம் வாய்ந்த புரட்டஸ்தாந்து நகராகிய "நிகேக்"கில் 1900-ம் ஆண்டில் அல்ஃவிறின்க் உதித்தார். நிகேக் நகரத்து முதற் சுதேச குருவானவர் இவரேயாவர். சர்வகலாசாலையில் 18 வருட காலமாகத் தொண்டாற்றிய கருதினல் அல்ஃவிறின்க் இன்று "வேதாகமத்தில் வல்லுநர்" என யாவராலும் மதிக்கப்பட்டு வருகிறார். வேதாகமத்தை ஒல்லாந்து பாஷையில் மொழிபெயர்க்க முக்கிய உதவியளிப்பாளராக இருந்தவரும் இவரேயாவர்.

குரவர் அல்ஃவிறின்க் 1955-ம்ஆண்டு மேற்றிராணியாராகவும், 1960-ஆண்டு கருதினல் அல்ஃவிறின்க் ஆகவும் நியமனஞ் செய்யப்பெற்றார். இன்று இவர், தமது நேரமுழுவதையும் திருச்சங்கத்திற்காக ஆயத்தம் செய்வதிலேயே செலவழித்து வருகிறார்.

"மத்திய ஆயத்தக்குழு உண்மையிலேயே ஒரு சர்வதேசக்குழு. ஆனல், அது இதிலும் மேலானது; அது ஓர் சிறிய திருச்சபை. அது தன்னிலேயே ஒரு சிறிய திருச்சங்கம்" எனக் கூறுகிறார் 102 அங்கத்தவர்களிலொருவரான கருதினல் அல்ஃவிறின்க் ஆண்டகை.

**5. அதி மேன்மைதங்கிய கருதினல் வலேரியன் கிருசியாஸ் ஆண்டகை**

கருதினல் கிருசியாஸ் ஆண்டகையவர்கள் நம் இலங்கை மக்களுக்கு ஒரு அந்நியரல்ல. அவர் எம் சொந்தத் தந்தையாவர். 62 வயதுகொண்ட கருதினல் ஆண்டகை இந்தியாவின் சரித்திரத்திலேயே முக்கிய இடத்தை வகிக்கின்றார். வலேரியன் கிருசியாஸ் 1946-ம் ஆண்டு மேற்றிராணியாராக அபிஷேகம் செய்யப்பெற்று, 1950-ம் ஆண்டு பம்பாய் அதிமேற்றிராணியாராக அபிஷேகம் செய்யப்பெற்றார். தோமஸ் அப்போஸ்தலரினல் கிறிஸ்துவம் இந்தியாவில் நிலைநாட்டப்பட்டதென அநேகர் கருதிடினும் 400லட்ச சனத்தொகையில் 6 லட்ச மக்கள் மாத்திரமே கத்தோலிக்கர். சைவசமயப் பண்பாடுகள் முன்னணியிற் திகழ்ந்துவரும் இந்நாட்டில் கருதினல் கிருசியாஸ் கத்தோலிக்க சமயத்தை மக்களிடையே பரப்ப எடுத்துவரும் முயற்சிகள் சொல்லுந்தரமன்று. ஆகவே, இந்தியாவில் திருச்சபையின் முக்கியத்துவத்தை நன்கு எடுத்துக்காட்டும் பொருட்டு, 12-ம்பத்திநாத பாப்பரசர் பம்பாய் அதிமேற்றிராணியாரைக் கருதினல் பதவிக்கு 1953-ம் ஆண்டு உயர்த்தினர். பரிசுத்ததந்தை இவரைத் திருச்சங்கத்தின் மத்திய ஆயத்தக்குழுவில் நியமித்திருக்கிறார். திருச்சபையின் ஆசியாக்கண்டத்து இளவரசர் திருச்சங்கத்தில் எவ்வளவு முக்கியத்துவம் வகிப்பார் என யாவரும் ஊகித்து அறிந்து கொள்ளலாம். காராச்சியிலுள்ள வறுமைக் குடும்பத்தில் பிறந்த வலேரியன் கிருசியாஸ், ஐப்பசித்திங்கள் 11-ந்திகதி இந்தியாவின் இலட்சக்கணக்கான மக்களின் பிரதிநிதியாக விளங்குவார்.

**6. அதி மேன்மைதங்கிய கருதினல் லொறியன் றுகம்வோ ஆண்டகை.**

1912-ம் ஆண்டு கிழக்கு ஆபிரிக்காவில் தங்கனிக்காப் பிரதேசத்தில் பிறந்தார், திருச்சபையின் முதலாவது நீக்கிரோவான கருதினல் லொறியன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுச்சங்கங்களின் வரலாறும் முடிபுகளும்

நுகம்வோ ஆண்டகை. நிசியா சாதியைச் சேர்ந்த இச்சுதேச குடும்பம் லொறியன் எட்டுவயதுப் பையனாக இருக்கும்போது கத்தோலிக்க வேதத்திற்கு மனந்திரும்பப்பட்டது.

இவர் தன் ஆரம்பக்கல்வியை ஆபிரிக்கப்பாடசாலைகளிலும், பின் ஆபிரிக்க குருமடத்திலும் முடித்தபின் 1943-ம் ஆண்டு குருப்பட்டாபிஷேகம் செய்யப்பட்டார். இளங்குரவாது கல்வித்திறனும் ஊக்கமும சிறந்து விளங்கியமையால் உயர்தரக்கல்விக்காக அழியா நகரமான ரோமைக்கு அனுப்பப்பட்டார். கல்விமுடித்த நுகம்வோ தம் சுதேச நாட்டிற்குத் திரும்பியவுடன் 1953-ம் ஆண்டில் றுடாபோ மேற்றிராணியாராக அபிஷேகம் செய்யப்பெற்ருர். தற்போது இவர் ஆறு பாஷைகளில் கைதேர்ந்தவராக இருக்கிருர். "அர்ச். அகுஸ்தீனுர் சங்கம்" என அழைக்கப்படும ஸ்தாபனத்தை உண்டுபண்ணி, மக்களைச் சமூக வாழ்விற்கு வேண்டிய விதங்களில் பயிற்றியும் வருகிருர்.

பரிசுத்ததந்தை 47வயதான கருதினுல் நுகம்வோ ஆண்டகையை 1960-ம் ஆண்டு கருதினுல் பதவிக்கு உயர்த்தி இன்று அவரை மத்திய ஆயத்தக்குழுவில் ஒருவராக நியமித்திருக்கிருர். ஐப்பசித்திங்கள் 11-ந் திகதி நிகழவிருக்கும் திருச்சங்கத்தில், ஆபிரிக்காவின் 24 இலட்ச கத்தோலிக்க மக்களின் பிரதிநிதியாகச் சமூகம் வகிப்பார் இக்கருதினுல் நுகம்வோ ஆண்டகையவர்கள்.

**7. அதி மேன்மைதங்கிய கருதினுல் ஜோசவ் சுனென்ஸ் ஆண்டகை.**

பெல்ஜியத்திலுள்ளதும், உலகத்தில் பெரிய மேற்றிராசனமென்று சொல்லக்கூடியதுமான மாலின்ஸ் புறாசல்ஸ் என்ற மேற்றிராசனத்தை நடத்துபவர் லெயோன் ஜோசவ் சுனென்ஸ் கருதினுல் ஆண்டகையாவா, புறாசலில் பிறந்த கருதினுல் லெயோன் ஜோசவ், வரவிருக்கும் திருச்சங்கத்திற்காக ஆயத்தம் செய்யும் பொருட்டு, பரிசுத்ததந்தையால் 1960-ம் ஆண்டு, "மேற்றிராசனங்கள் ஆளும்குழு"வில் ஒருவராக நியமனஞ் செய்யப்பெற்று, கருதினுல் பதவிக்கு 5 மாதங்களுக்கு முன்புதான் உயர்த்தப்பட்டார். உலகம் இவரைப் பெரும் எழுத்தாளராகவே அறிந்திருக்கின்றது.

வாலிபன், லேயோன் ஜோசவ்மேல் மிக்க கவனம் செலுத்தி அவரை ரோமாபுரியிலுள்ள கிறகோறியன் சர்வகலாசாலைக்கு அனுப்பிவைத்து தத்துவ சாஸ்திரம், வேதசாஸ்திரம் இவற்றில் பல்கலைக்கழகப்பட்டம் பெறவேண்டிய உற்சாகம் அளித்தவர் கருதினுல் மேசியர் ஆண்டகையவர்களாவர், சிறிய வாலிபனும், நாளொரு வண்ணமும் பொழுதொருமேனியுமாக ஞானத்தில் வளர்ந்து 1927-ம் ஆண்டு குருப்பட்டாபிஷேகம் பெற்ருர். 1940-ம் ஆண்டில் லுவெயினிலுள்ள கத்தோலிக்க சர்வகலாசாலையில் உபஅதிபராக நியமனஞ் செய்யப்பட்டார். 58 வயதுள்ள கருதினுல் சுனென்ஸ் ஆண்டகை பெல்ஜியத்திலுள்ள அச்சகம், வானெலிநிலையம், தொலைக்காட்சிச் சாதனம் (T V) இவற்றிற்குத் தலைமை வகிப்பதும் இங்கு குறிப்பிடத்தகும்.

**8. அதி மேன்மைதங்கிய கருதினுல் அல்fவெறெடோ ஒட்டாவியானி ஆண்டகை.**

திருச்சபையானது மிகப் பழமை வாய்ந்ததாகவும், என்றும் புதியதாகவுமே காணப்படுகின்றது. வரவிருக்கும் திருச்சங்கத்தில் பாரிய பழக்கவழக்கங்களின் முக்கியத்துவத்தைத் திருச்சபைக்கு நினைவூட்டிக் கொண்டிருப்பவர், ரோமாபுரியில் பிறந்து வளர்ந்த கருதினுல் ஒட்டாவியானி ஆண்டகையாகும்.

1890-ம் ஆண்டு அப்பம்சுட்டு விற்கும் ரோமாபுரிவாசிகளில் ஒருவருக்கு மகனாய்ப் பிறந்தார் அல்fவெறெடோ ஒட்டாவியானி. 1916-ம் ஆண்டு குருப்பட்டாபிஷேகம் பெற்றுக் கடந்த 36 வருடங்களாகத் திருச்சபையில் முக்கிய அலுவல்களில் தொண்டாற்றி வந்திருக்கின்ருர். பரிசுத்ததந்தை, இவரை வேதசாஸ்திரக்குழுவின் தலைவராக நியமித்திருக்கிருர். அற்பபாவத்தைப்பற்றிய வேதவிளக்கம் நவீன சமூக அறத்தைப்பற்றிய விடயங்கள், இன்னும் திருச்சபைக்குப் புறம்பாய் உள்ளவர்களின் இரட்சணியம் இவை பற்றி இக்குழு ஆராயும். இவர் எழுதிய புத்தகங்களுள் "திருச்சபையின் பொதுச்சட்டம்" (Public Law of the Church) முக்கியத்துவம் வகிக்கின்றது.

**9. அதி மேன்மைதங்கிய கருதினுல் பப்டிஸ்டா மொன்டீனி ஆண்டகை**

பரிசுத்ததந்தை 23-ம் அருளப்பர் கருதினுல் பதவியை முதன்முதலாக அளித்தது மொன்டீனி ஆண்டகையவர்களுக்கேயாகும், 64 வயதுகண்ட கருதினுல் கடந்த ஆறுவருடங்களாக இத்தாலியின் மிகப்பெரிய மேற்றிராசனமாகிய மிலான் (Milan) நகரில் அதிமேற்றிராணியாராகத் தொண்டாற்றி வருவதுமல்லாமல் அவர் திருச்சபைக்காற்றிவரும் பணிகளோவெனில் எடுத்தியமப இயலாதனவாகும்.

"தொழிலாளரின் மேற்றிராணியார்" என அழைக்கப்பட்டுவரும் கருதினுல் மொன்டீனி ஏறக்குறைய மிலானிலுள்ள தொழிற்சாலைகள் எல்லாவற்றையுமே தரிசித்து வருகிருர். இத்துடன் இவர் தொழிலாளர்களுக்குச் சொற்பொழிவு ஆற்றிவருவதும் வழக்கமாயிற்று இவர், குருப்பிரசாதிகளையும் தொழிற்சாலைகளைத் தரிசித்து வருமாறு ஊக்குவித்ததும் இங்கு குறிப்பிடத்தகும்.

"திருச்சபையை எதிர்த்து நிற்கும் பிரச்சினைகள் எல்லாவற்றையும் திருச்சங்கமானது மாயவித்தையாகத் தீர்த்துவைக்கும் என்ற தப்பெண்ணத்தை அகற்றுமாறு மக்களை எச்சரித்துள்ளார். ஆயினும், வரவிருக்கும் திருச்சங்கமானது கடந்த சங்கங்களிலும் பார்க்கத் திருச்சபையின் சரித்திரத்திலேயே முக்கிய இடத்தைப் பெறும்" எனச் சமீபத்தில் வெளியிட்ட நிருபத்தில் கூறியுள்ளார் கருதினுல் மொன்டீனி ஆண்டகை.


**ஒருமுறை தரிசியுங்கள்!**

பலவிதமான பட்டு, பருத்திப் புடவைகள்
நவீன டிசைன்களில் விலை மலிவாகக் கிடைக்கும்.

புதுவித ரோல்ட்கோல்ட் காப்பு, சங்கிலி, தோடு,
தாலிக்கொடிகளும் இன்னும்பல நகைகளும்
பெற்றுக்கொள்ளலாம்.

**B. J. அலோஷியஸ்**

இல. 32, 34, பெரியகடை, — யாழ்ப்பாணம்.

(கன்டியன் [illegible] ஏஜண்டுகள்)


**பொதுச்சங்கம்என்ருல் என்ன ?**

"திருச்சபையின் மதம், ஒழுக்கம், முறை முதலியவைகளை ஆராய்ந்து தீர்மானிக்கும்பொருட்டு முழுஉலகத்திலுமுள்ள மேற்றிராணிமார், வேதசாஸ்திரிகள், நிபுணர்கள் பாப்புவினுல் அழைக்கப்பட்டு, ஒன்ருக அவருடையதலைமையின்கீழ் சங்கமகூடுவதே பொதுச்சங்கம."

சென்ற இருபது நூற்ருண்டுகளில் திருச்சபையானது இஸ்பிரீத்துசாந்து சருவேசுரனுடைய உதவியோடு இருபது பொதுச்சங்கங்களைக்கூட்டி, மக்களுடைய அபிப்பிராயங்களை அலசி ஆராய்ந்து தப்பறையான கொள்கைகளைப் பிழையென எடுத்துக்காட்டி உண்மையும சரியுமான போதனைகளைக் கத்தோலிக்கரின் விசுவாசத்திற்கு எடுத்துப்பிரகடனப்படுத்தியிருக்கிறது. இவ்வாறு சுவிசேஷத்திலும், பாரம்பரியத்திலும் சருவேசுரனுல் வெளிப்படுத்தப்பட்ட சத்தியங்களை இஸ்பிரீத்துசாந்துசருவேசுரனுடைய உதவியோடு எமது மாதாவாகிய திருச்சபை தொகுத்து வந்திருக்கிறது.

**1-ம் பொதுச்சங்கம்** நிசேயா என்றஇடத்தில் கி. பி. 324-ம்ஆண்டில் கொன்ஸ்ரன்ரைன் என்பவரால் கூட்டப்பட்டது. கிறீஸ்துநாதரின் தேவசுபாவத்தைமறுத்த ஏரியஸ்என்பவரின் கொள்கை தப்பறையானதுஎன்று தீர்க்கப்பட்டது.

**2-ம் பொதுச்சங்கம்** கொன்ஸ்ரான்ரிநேபிள் என்றஇடத்தில் கி. பி. 381-ம்ஆண்டில் முதலாம் தியோடிசியஸ் என்பவரால் கூட்டப்பட்டது. இஸ்பிரீத்துசாந்துவானவர் கடவுள் அல்லவென்றுமறுத்த மசிடோனியஸ் என்பவரின்கொள்கை தப்பறையானது என்று தீர்மானிக்கப்பட்டது.

**3-ம் பொதுச்சங்கம்** எபேசு என்றஇடத்தில் முதலாம் செலஸ்தீன் பாப்பாண்டவராக இருந்தகாலத்தில் கி. பி. 431-ம்ஆண்டில் 2-ம் தியோடிசியஸ் என்பவரால் கூட்டப்பட்டது. இக்காலத்தில் நெஸ்ரோறியஸ் என்பவர் கிறீஸ்துவில் இரண்டு ஆட்கள் (தேவன்—மனிதன்) உண்டென்றும், மரியம்மாள் மனிதனுகிய கிறீஸ்துவின் தாயாரேயொழிய தேவனுகிய கிறீஸ்துவின் தாயாரல்லவென்று தப்பறையாகப் போதித்துவந்தார். இக்கூற்றுக்களைமறுத்த இச்சங்கம் கிறீஸ்துநாதர் ஒரு தெய்வீகஆளாகவே இருக்கிருர்; மரியம்மாள் தேவனின் தாய் என்ற சத்தியங்களைப் பிரகடனப்படுத்தியது.

**4-ம் பொதுச்சங்கம்—கால்செடொன் (Chalcedon)**என்ற இடத்தில் மார்சியன் என்பவ்ரால் அர்ச். சிங்காரயர் பாப்பரசருடைய அநுமதியுடன் 451-ம்ஆண்டு கூட்டப்பட்டது. இயூரிக்கஸ் என்பவர் கிறீஸ்துநாதரில் ஒரு சுபாவம் மாத்திரம் உண்டு என்று தப்பறையாகப் போதித்த கொள்கையை இச்சங்கம் மறுத்தது. இச்சங்கத்தின் முடிபின்படி கிறீஸ்துநாதரில் மனுஷசுபாவம், தேவசுபாவம் என இருசுபாவங்கள் இருக்கின்றன. இவ்விரு சுபாவங்களும் தேவனுகிய கிறீஸ்துநாதரில் ஒன்றித்து அவருடைய மனுஷீகசெயல்கள் யாவற்றையும் தெய்வீக மயமாக்குகின்றன என்று திருச்சபை போதித்து வருகிறது.

**5-ம் பொதுச்சங்கம்** கொன்ஸ்ரான்ரிநேபிள் என்ற இடத்தில் இரண்டாம் முறையாக ஜஸ்டீனியன் என்பவரால் கி. பி. 553-ம்ஆண்டில் கூட்டப்பட்டது. நெஸ்ரோறியஸ் என்பவரின் தப்பறையான கொள்கைகளை அடிப்படையாகக்கொண்டு "மூன்று அத்தியாயங்கள்" என்ற பெயருடன் மொப்சுஎஸ்ரா என்ற இடத்தைச்சேர்ந்த தியோடோர், தியோடோரெட், ஈபாஸ் என்னும் மூவர் எழுதியநூல் தப்பறையானது என்று கண்டிக்கப்பட்டது.

**6-ம் பொதுச்சங்கம்** கொன்ஸ்ரான்ரிநோபிள் என்ற இடத்தில் மூன்றும் முறையாக அகத்தோ, 2-ம் சிங்காராயர் என்ற பாப்புமாரால் கி. பி. 680-ம் ஆண்டில் கூட்டப்பட்டது. கொன்ஸ்ரான்ரிநோபிள் பிதாப்பிதாவாகிய சேர்ஜியஸ் பரப்பிய "மொனேதிலேற்ஸ்" என்ற தப்பறையான கொள்கை கண்டிக்கப்பட்டது. இக்கொள்கை கிறிஸ்துநாதரில் இரண்டு சுபாவங்கள் இருந்தாலும் ஒரு சித்தமே (தேவசித்தமே) இருக்கிறது என்று வற்புறுத்தியது. ஆனுல், திருச்சபையானது கிறிஸ்துநாதரில் தேவசித்தம், மனிதசித்தம் என இரண்டு சித்தங்கள் இருக்கின்றன என்று போதித்தது.

**7-ம் பொதுச்சங்கம்** நிசேயா என்ற இடத்தில் இரண்டாம் முறையாக 787-ம் ஆண்டு கூட்டப்பட்டது. திருச்சுரூப ஆராதனை தப்பிதமானது என்ற தப்பறைக் கொள்கையைக் கண்டனம்செய்து இச்சங்கம் திருச்சுரூப ஆராதனைக்குத் திருச்சபையில் இடம் இருக்கிறது என்று வற்புறுத்தியது.

**8-ம் பொதுச்சங்கம்** கொன்ஸ்ரான்ரிநோபிள் என்ற இடத்தில் நாலாம் முறையாகக் கி. பி. 869-ம் ஆண்டில் கூட்டப்பட்டது. இச்சங்கம் அரசாங்க உதவியுடன் கொன்ஸ்ரான்ரிநோபிளின் பிதாப்பிதாவாகத் தன்னை ஆக்கிக்கொண்ட போற்றியஸ் என்பவரையும் அவர் திவக்கிய கிரேக்க கிழக்குத்தேய திருச்சபையையும் கண்டித்தது. இன்றும் இப்பிரிவினைச்சபை இருந்தே வருகிறது. இச்சபையினர் பாப்பாண்டவரின் வழுவாவரத்தை விசுவசிப்பதில்லை. குருக்கள் விரத்தாராய் இருக்கவேண்டுமென்று கத்தோலிக்க திருச்சபை வற்புறுத்துதல் தவறு என்றும் எண்ணுகின்றனர். மீண்டும் இஸ்பிரீத்துசாந்து சருவேசுரன் பிதாவாகிய சருவேசுரனிடமிருந்து மாத்திரமே புறப்படுகிருரென்று விசுவசிக்கிருர்களேயன்றி கத்தோலிக்க திருச்சபை போதிக்கும் பிதாவாகிய சருவேசுரனிடமும், சுதனுகியசருவேசுரனிடமும் இருந்து இஸ்பிரீத்துசாந்துவானவர் புறப்படுகிருர்என்ற சத்தியத்தை அவர்கள் விசுவசிக்கிறதில்லை. இச்சங்கம்869-ம் ஆண்டிலும், 870-ம்ஆண்டிலும் நடைபெற்றது.

**9-ம் பொதுச்சங்கம்** லாத்தரன் (ரோமாபுரி) என்ற இடத்தில் முதலாம் முறையாகக் கி. பி. 1123-ம் ஆண்டில் கூட்டப்பட்டது. இச்சங்கம் திருச்சபையின் உரிமைகளை வரைவுறுத்தியது. மேற்றிராணிமாரையும், மடாதிபதிகளையும் தெரிவுசெய்வதில் அரசியல் தலைவர்களுக்கு உள்ள அதிகாரத்தை மட்டுப்படுத்தியது.

**10-ம் பொதுச்சங்கம்** லாத்தரன் (ரோமாபுரி) என்ற இடத்தில் இரண்டாம் முறையாகக் கி. பி. 1139-ம் ஆண்டு கூட்டப்பட்டது. புருஸ் என்னும் நகரின் பீற்றரும், பிறெஸ்சியா என்னும் நகரின் ஆர்னல்ட் என்பவரும் குழந்தை ஞானஸ்நானம், அடுத்தார் கோயில் அமைத்தல், திருச்சிலுவை வணக்கம், பூசைப்பலி, திவ்வியநற்கருணை, மரித்தோருக்காகச் செபித்

[8-ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தினசரி பூசை வழிகாட்டி

### ஐப்பசி

| | | | |
|---|---|---|---|
| 7 | ஞா. | இஸ். ஆக. பின் 17-ம் ஞாயிறு (திருச்செபமாலைத் திருநாள்) (வி. ம.) | [ப] |
| 8 | திங். | அர்ச். விறிசித்தம்மாள் | [வெ] |
| 9 | செ. | அர்ச். லெயோஞடி அருளப்பர் (தியோனிசியாரும் தோழரும்) | [வெ] |
| 10 | புத. | அர்ச். பிரான்சீஸ்கு போர்ஜியார் | [வெ] |
| 11 | வி. | கன்னிமரியாயின் தேவதாய்மைத் திருநாள் (வி. ம.) | [வெ] |
| 12 | வெ. | காலதினம் | [ப] |
| 13 | ச. | அர்ச். எற்வேட் இராசா | [வெ] |


# சத்தியவேத பாதுகாவலன்

1962-ம் ஆண்டு ஐப்பசிமாதம் 6-ந் திகதி


## எங்களோடு தங்கியிரும்

அந்தி நேரம். பொழுது சாயும் வேளை. எருசலேம் நகரிலிருந்து எமாவுஸ் செல்லும் பாதை. இருவர் மெள்ள மெள்ள நடந்து செல்கின்றனர். கவலை தோய்ந்தவர்களாகக் காட்சியளிக்கின்றனர் அவர்கள். வாழ்க்கையின் பாதையில் இருள், தனிமை, சோகம், அச்சம், நடுக்கம், பிரச்சினைகள் அனைத்தையும் கண்டவர்கள் அந்த மனிதர்கள்.

அதோ மற்றொருவர் வருகின்றார். அவரும் அவ்வழியாகச் செல்பவர்தான். அவர்களோடு சேர்ந்து செல்லத்தொடங்குகிறார். அம்மனிதர்கள் கொண்டிருந்த கவலையின் காரணத்தை வினவுகிறார். எருசலேமின் நிகழ்ச்சிகள் எடுத்தோதப்படுகின்றன. நாங்கள் இசிறவேலரை மீட்பவர் அவரென நம்பியிருந்தோம். ஆயின் இவையெல்லாம் நடந்து மூன்று தினங்களாகிவிட்டன எனக் கூறுகின்றனர். அந்த வார்த்தைகளில் எவ்வளவு வெறுப்பு, அவநம்பிக்கை தொனிக்கின்றன.

அவர் அவர்களுடன் உரையாடினார், வேதாகம வார்த்தைகள் எவ்விதம் நிறைவேறின என்பதை எடுத்துக்காட்டினார். கவலைதோய்ந்த அவர்களின் உள்ளங்கட்குச் சாந்திதந்தது அவரின் உரையாடல். அந்திநேரமாகிப் பொழுதும் சாய்ந்துவிட்டதே. எங்களோடு தங்கியிரும் என அவர்கள் வேண்டிக்கொண்டனர்.

எனவே எமாவுஸ் நகருக்குள் அவர்களோடு அவரும் பிரவேசித்தார். அவர்கள் அசனமேசையில் அமர்ந்தனர். அவர் அப்பத்தை எடுத்து ஆசீர்வதித்து அவர்களிடம் அளித்தார். அவர் யாரென்பதை அறிந்துகொண்டனர் அவர்கள். அவரோ அவ்விடத்தைவிட்டு மறைந்துவிட்டார். அவரைப்பற்றி அவர்கள் தங்கட்குள் உரையாடினர். வழியில் எங்களோடுபேசி எங்களது அச்சம், கவலை, நடுக்கம் அனைத்தையும் அகற்றிவிட்டாரே என அவர்கள் ஆச்சரியத்தோடு கூறினர்.

ஆயிரத்துத் தொளாயிரம் ஆண்டுகள் கழிந்துவிட்டன இது நடந்து. இன்று கத்தோலிக்கர்களாகிய நாம் வாழ்க்கையின் ஓரத்திலே சென்றுகொண்டிருக்கிறோம். நாத்திகர்களின் நச்சுப்பிரசாரங்கள் எம்மை நலியவைக்கின்றன. பொதுவுடைமைவாதிகளின் பொய் முழக்கங்கள் கேட்டு நடுங்குகிறோம். எல்லையில்லா ஆடம்பரங்களும் அளவுக்குமிஞ்சிய ஆபாசங்களும் எம் கண்ணையும், கருத்தையும் ஒருங்கே மயக்குகின்றன. நவீன விஞ்ஞானயுகத்தின் கண்டுபிடிப்புகள், எம் உள்ளத்தில் எஞ்சியிருக்கும் விசுவாசத்தையும் அகற்றவிடும் நிலையில் ஓங்குகின்றன. சத்திய திருச்சபை அதன் வரலாற்றில் இருளடைந்த வழிகளினூடாகப் பயங்கர பயணமொன்றை நடாத்திக் கொண்டிருக்கிறது.

சாத்தானின் சோதனைகள் உக்கிரமாக எம்மெய்ம்மறையைஆட்டி அசைத்து அலைக்கழிக்கின்றன. கவலை, அச்சம், நடுக்கம், தளர்ச்சி ஆகியவற்ருல் ஒரேயடியாக அழிந்துபோகும் எங்கள் பாதையில் அதோ அந்தமனிதர் வருகிறார். அன்று அப்போஸ்தலர்களின் அச்சம் போக்கியவர் இன்று சங்கம்கூட்டும் அற்புதயோசனைதந்து தம் அப்போஸ்தலர்கட்குத் திடமளித்திருக்கிறார்.

சங்கம்கூட்டுதல் சாதாரண அலுவல்அல்ல. கடந்தகால பொதுச்சங்கங்களின் வரலாறுகள் அப்பணி எவ்வளவு பொறுப்பு மிக்கதென்பதைக் காட்டுகின்றன. எத்தனை மோதல்கள்? கருத்து வேற்றுமைகள், பிரிவினைகள், அச்சுறுத்தல்கள் எல்லாம் எழும்பி சங்கத்தின் சித்தியைக்குலைக்க முயன்றிருக்கின்றன.

ஆடம்பர வைபவங்களுடன் பொதுச்சங்கம் ஆரம்பமாகிறது. அகில உலகும் சங்கநிகழ்ச்சிகளைக் கூர்ந்து கவனிக்கின்றது. எம் மெய்ம்மறையை எதிர்நோக்கும் பலபிரச்சனைகள் சங்கத்தில் விவாதிக்கப்படும். அப்போதெல்லாம் சங்க ஆயர்கட்கு தேவனின் ஞானவரங்கள் நிச்சயம் தேவை.

அந்திநேரமாகிப் பொழுதும் சாய்ந்துவிட்டதே ஆண்டவரே எங்களோடு தங்கியிரும்.

## தீதிலாது திரும்பிவருக!

வந்தனைக் குரிய வெங்கள் மனம்நிறை யாண்டகை சென்றார்
சிந்தனைக் குரிய திருமறை சிறக்கச் சேர்ந்திருந் தாய
பந்தனை யுலக மாளும் பாப்புவின் பணிமேற் கொண்டு
செந்தினை யளவு தானும் தீதிலா துதிரும் பிவருக.



- எங்கள் அன்புத்தந்தை சேமமே ரோமை நகரைச் சேரவேண்டும்.
- சங்க சித்திக்கு ஆண்டகையின் அறிவும் அனுபவமும் உதவவேண்டும்.
- பரிசுத்த பாப்புவின் தனிப் பேட்டியைப்பெறும் பாக்கியம் எங்கள் ஆயருக்குக் கிடைக்கவேண்டும்.
- ஆயரின்றித் தவிக்கும் எம்மைக் களிப்பிலாழ்த்த மீண்டும் நற்சுகமே வந்துசேர்தல் வேண்டும் என,

பாதுகாவலன் ஆசிக்கிறன்.

# பொதுச்சங்க ஆரம்பவிழா

சத்திய திருச்சபை இந்த நூற்றாண்டில் கண்டுகளிக்கவிருக்கும் இணையற்ற நிகழ்ச்சியான திருச்சபைப் பொதுச்சங்கத்தை ஆடம்பர வைபவங்களுடன் ஆரம்பிப்பதற்கான இறுதி ஏற்பாடுகள் அனைத்தும் நித்தியநகரம் என அழைக்கப்படும் ரோமையில் பூர்த்தியாகிவிட்டன. இதுவரை ஏராளமான ஆயர்கள் வந்து சேர்ந்துவிட்டனர் எனவும் மிகுதிப்பேர் ரோமைக்குச்செல்லும் பாதையில் பயணம் மேற்கொண்டுள்ளனர் என்றும் தந்திச்செய்திகள் தெரிவிக்கின்றன.

எதிரேவரும் ஐப்பசித்திங்கள் பதினோராம் தினத்தில் சங்கம் ஆரம்பமாகின்றது. அன்றுகாலை ஏழரைமணிக்கு எங்கள் பரிசுத்த தந்தை 23-ம் அருளப்ப பாப்பரசர் வத்திக்கானின் பிரதான மண்டபமொன்றில் ஆயர்கள், கர்தினால்கள், பிதாப்பிதாக்கள் அனைவரையும் வரவேற்பார். பின்னர் பொதுச்சங்கத்தின்மேல் திவ்விய இஸ்பிரீத்துவின் அருட்கொடைகளை வேண்டி வேனிக்கிரேயாத்துர் கீதம் பரிசுத்த தந்தையால் ஆரம்பித்துவைக்கப்படும். ஆயர்கள் அனைவரும் கீதத்தைத் தொடர்ந்து பாடுவர்.

பின்னர் ஆயர்களின் பவனி ஆரம்பமாகும். பவனியின் இறுதியில் பாப்பரசர் வருவார். இராயப்பர் மகாலயத்தைநோக்கி பவனி அணிவகுத்துச் செல்லும். அங்கு சங்க ஆரம்பதினத்தைக் கண்டுகளிக்கக் காத்திருக்கும் இலட்சக்கணக்கான மக்களின் நடுவாகப் பவனிசெல்லும். பரிசுத்த தந்தையைக் கண்டதும் மக்களின் மகிழ்ச்சி எல்லையற்றதாகிவிடும். "வீவா இல் பப்பா" அதாவது தாத்தாவே வாழ்க! என அவர்கள் குரல் எழுப்புவர். கிறிஸ்துவின் பிரதிநிதி தமது கரங்களை உயர்த்தி அப்போஸ்தலிக்க ஆசி அருளுவார்.

பவனி ஆலயத்துள் பிரவேசிக்கும். பாப்பரசர் தமது சிம்மாசனத்துக்கு அழைத்துச்செல்லப்படுவார். பின்னர் கர்தினால் திசரென்ற் ஆண்டகை திவ்விய பலிபூசை நிறைவேற்றுவார். முடிவில் பாப்பு பிரதான பீடத்துக்குச் சென்று சங்கத்தை ஆரம்பித்துப் பிரகடனப்படுத்துவார். பி. பி. சி. வானொலி உட்பட ஐரோப்பாவின் பல வானொலி நிலையங்கள் இவ்வைபவத்தை அஞ்சல் செய்வதுடன் தொலைக்காட்சியிலும் தெரிவிக்கும். அமெரிக்காவுக்கெனத் தெலிஸ்டார் முறையில் இக்காட்சிகள் அனுப்பப்படும்.

வத்திக்கானில் தங்கியுள்ள எல்லாத் தேசங்களின் தூதராலய அதிகாரிகளும் வைபவங்களில் பிரசன்னமாயிருப்பர். இத்தாலிய ஜனாதிபதி சேகனி உட்பட பலதேசங்களின் தலைவர்கள் பிரதமர்களும் கலந்துகொள்வரென எதிர்பார்க்கப்படுகின்றது. அன்றுமாலை வத்திக்கானின் இராச்சியபார மந்திரியார் வெளிநாட்டுத் தூதுவர்கட்கு உபசரணையொன்று நடாத்துவார்.

மாலையில் ரோமைமக்கள் பல்லாயிரக்கணக்கில் ஒன்றுகூடுவர். மெழுகுவர்த்திகளுடன் இராயப்பர் மகாலயத்தை நோக்கிப் பவனிசெல்வர்.

**இராயப்பா என் ஆட்டுக்குட்டிகளையும், ஆடுகளையும் மேய்ப்பாயாக அரு: 12:15, 16,17.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்க ஜனநாயகத்துக்கு

## பொதுச்சங்கம் ஓர் உதாரணம்

திருச்சபையின் ஆட்சியில் ஜனநாயகமுறை இல்லையென்று சிலர் கூறுகின்றனர். இப்படிக் கூறுவோர் ஜனநாயகத்தின் தன்மையையும் திருச்சபையின் முறைகளையும் அறியாதவரே. ஆகவே 2-ம் வத்திக்கான் பொதுச்சங்க நடைமுறைகளை ஓர் உதாரணமாகக்கொண்டு திருச்சபையில் விளங்குகிற ஜனநாயக முறைகளை உணர்ந்துகொள்ளுவோம்.

இன்று பல ஆட்சிவகைகள் நிலவும் நாடுகள் தாம்தாம உண்மை ஜனநாயகம் என்று கூறிக்கொள்ளுகின்றன. ஆகவே உண்மையான ஜனநாயகத்துக்கு ஓர் உரைகல்வேண்டும். உண்மை ஜனநாயகம் என்றால் என்ன? ஒருசமூகத்தைச்சேர்ந்தோர், ஒருவர் ஒருவருடைய முன்னேற்றத்துக்காகவும், ஒன்றித்தும் தனித்தும், ஊக்கத்துடன் பங்குபற்றிக்கொள்ளுகிற முறையே ஜனநாயகமாகும். திருச்சபையின் ஆட்சியில் நாம் காணும்முறை இதுவன்றிப் பிறிதல்ல.

திருச்சபையின் தன்மையை அர்ச்சியசிஷ்ட சின்னப்பர் இனிது விளக்கியிருக்கின்றார். திருச்சபையானது யேசுநாதரின் ஞானச்சரீரம் என்கிறார். திருச்சபையிலுள்ள ஒவ்வொருவரும் கிறிஸ்துநாதரின் ஞானச்சரீரத்தின் அங்கத்தினராவர். ஒரு சரீரத்தின் அங்கம் ஒவ்வொன்றும் ஒவ்வொரு குறித்தவேலையைச் செய்து வருவதுபோல் திருச்சபையிலுள்ள ஒவ்வொருவரும், பாப்பரசர்தொடக்கம் சிறுவர் சிறுமியர்வரையும், திருச்சபையில் ஒரு குறிக்கப்பட்ட வேலையைச் செய்துவருகின்றனர். இந்த ஞானச்சரீரத்தின் உயிர் திவ்விய இஸ்பிரீத்துசாந்துவே. ஒவ்வொரு அங்கத்தவனும் "என்னில நான் அலல; கிறிஸ்துவே என்னில் சீவிக்கிறார்", என்று சொல்லத்தக்கதாக இருக்கின்றது. "எவன் என்னில் சீவிக்கின்றானே, அவன் என் பிதாவில் சீவிக்கின்றான்" என்று எமது கர்த்தர் கூறியிருப்பதை நாம் நோக்கும்பொழுது, ஞானஸ்நானம்பெற்ற ஒவ்வொரு ஆன்மாவிலும் பிதா சுதன் இஸ்பிரீத்துசாந்துவாகிய திரியேக சருவேசுரன் கலந்திருந்து அதற்கு அதி உன்னத மகிமையை அளிப்பதைக் கண்டுகொள்ளுகிறோம். ஒவ்வொரு ஆன்மாவும் சமதத்துவம், சம உரிமை, சகோதரத்துவம் என்னும் சனநாயக குறிக்கோள்கள் பூரணமாகப்பெற்று விளங்குகின்றது.

பரிசுத்த தந்தையாகிய 23-ம் அருளப்பர் பாப்பரசராகத் தெரிந்தெடுக்கப்பட்ட சில நாட்களுள் 2-ம் வத்திக்கான் சங்கத்தை ஒன்றுகூட்டத் தீர்மானித்தது நாம் அறிந்ததே. இந்தச் சங்கத்தில் ஞானஸ்நானம் பெற்ற ஒவ்வொருவனுக்குமுள்ள வேலையை அவர் சுட்டிக்காட்டியிருக்கின்றார். அந்தவேலை எதுவாயிருந்தபோதிலும், திருச்சபையின் முன்னேற்றத்துக்கும், ஒவ்வொரு அங்கத்தவனுடைய சிறந்த சீவியத்துக்கும் இன்றியமையாததாக இருக்கின்றது. இந்தவேலைகள் ஒன்று உயர்ந்தது மற்றது குறைந்தது என்று கொள்வதற்கு இடமில்லை. திருச்சபையில் ஆளும்பகுதியையும், ஆளப்படும் பகுதியையும் காண்கின்றோம். இவ்விருபகுதிகளும் பொதுச்சங்க வேலைகளிற் சிறப்பாக இணைக்கப்பட்டிருக்கின்றன. திருச்சபையின் வேலைக்கு இடறலாக இருக்கும்பல கருமங்களையும் அலசி ஆராய்ந்து நடைமுறைகளைக் கையாள்வதற்காக ஆளும் பகுதியாகிய மேற்றிராணிமார் பொதுச்சங்கத்துக்கு அழைக்கப்பட்டிருக்கின்றனர். மேற்றிராணிமார்கள் தமது வேலையில் தேவனின வரப்பிரசாதங்களை ஏராளமாகப் பெற்றுக்கொள்வதற்காகச் செபிக்குமாறு முழுத்திருச்சபையையும் கேட்கப்பட்டிருக்கின்றது. சாதாரண அங்கத்தவர்களாகிய எமது வேலை பொதுச்சங்கத்தின் சித்திக்கு அடிப்படையானது; மிகவும் முக்கியமானது; இன்றியமையாதது. செபமும் தபமும் ஏராளமாகத் தேவ சந்நிதானத்துக்கு எழுந்துசென்று வத்திக்கான் சங்கத்தின் சித்திக்குப் பரிந்து பேசாதுவிடில் சங்கம் அனுகூலமடையமாட்டாது. செபமும், தபமும் செய்துகொள்வது இலேசான அலுவல் அல்ல. செபிப்போரின் மனம் சுத்தமாகவும் அவர் ஞான உயிர் உடையவர்களாகவும் இருக்க வேண்டும். இதற்கு முயற்சி அவசியம்; தபம் சிறந்த துணை.

ஆகவே, திருச்சபையானது அதன் தன்மையிலும் அதன் முறைகளிலும் சனநாயகத்துவம் நிறைந்ததாக விளங்குகின்றது. திருச்சபையிலேயே சனநாயகம் பூரணத்துவம் பெற்றிருக்கின்றது எனக்கூறினல் மிகையாகாது. அங்கத்தவர் சகலரும் சமத்துவமுடையவர்கள்; சுதந்தரம் உடையவர்கள், சகோதரர்கள்—சனநாயகத்தைச் சனநாயகமாக்கும் முறைகள் யாவற்றையும் நாம் திருச்சபையிலே காண்கிறோம். உலக சனநாயக முறைகளில் குறைபாடுகள் இருந்தேதீரும். ஆனல், திருச்சபை தேவனது அருள் நிறைந்திருப்பதனல் அதில் காணப்படும் சனநாயக முறைகள் யாவும் பூரணம்பெற்று விளங்குகின்றன.



இராயப்பா நீ கல்லாயிருக்கிறாய்.

இந்தக் கல்லின்மேல் எனது திருச்சபையைக் கட்டியெழுப்புவேன்.


நரகத்தின் வாசல்கள் அதை மேற்கொள்ளா—மத். 16 : 18.

• • •

மோட்சத்தின் திறவுகோல்களையும் உன்னிடம் கொடுப்பேன்—மத். 16 : 19.

## உங்களுக்குத் தெரியுமா?

- இரண்டாம் வத்திக்கான்சங்கம் கூடப்போகுமிடம் அர்ச். இராயப்பர் தேவாலயமாகும்.
- இராயப்பர் தேவாலயத்துக்கு மகாலயம்என்ற கௌரவமும் உண்டு.
- நீரோமன்னனின் விளையாட்டுக்களரி இங்குதான் முன்னர் இருந்திருக்கவேண்டும்என்று நம்புகிறார்கள்.
- பின்னர் அர்ச். இராயப்பரை இங்குதான் புதைத்தார்கள் என்றும், அவரின் கல்லறையின்மேல் எழுப்பப்பட்டஆலயமே இது என்றும் புதைபொருளாராய்ச்சி நிபுணர்கள் குறிப்பிடுகின்றனர்.
- இந்த ஆலயத்தின் நீளம் 694 அடி. உயரம் 464 அடி.
- ஒவ்வொரு தூணுக்குமேலும் அழகியதோர் சொருபம் உண்டு. சொருபங்கள் மிகஉயரமானவை.
- கோவிலுக்குள் 44பீடங்கள் உண்டு. ஆயின், பிரதானபீடத்தில் திவ்வியநற்கருணை வைக்கப்படுவதில்லை.
- திவ்வியநற்கருணை ஒருசிற்றாலயத்தில் வைத்துக் காக்கப்படுகிறது.
- நடுப்பீடத்துக்குமேல் பெரியகோபுரம் உண்டு. அங்கு கலையழகு நிரம்பிய சித்திரங்கள் உண்டு.
- வெளிக்கதவிலிருந்து பீடம்வரை நடுமண்டபத்தின் நீளம் 613 அடி. அகலம் 82 அடி.
- கதவுகள் வெண்கலத்தாலானவை. பல சித்திரவேலைப்பாடுகள் கொண்டவை.
- மணிக்கோபுரங்களில் பெரியகண்டாமணிகள் பலஉண்டு. அவை சிங்கநாதம்செய்யின் பலமைல்தூரத்துக்குக் கேட்கும்.
- கலையழகுநிரம்பிய, புனிதம்வாய்ந்த இம்மகாலயத்தை நாசம் செய்வதற்குப் பலமுயற்சிகள் இதுவரை எடுக்கப்பட்டும் அவை தோல்வியடைந்துள்ளன.
- புராதனச் சிறப்புவாய்ந்த இராயப்பர்மகாலயம் 21-ம் பொதுச் சங்கம்கூடும் வரலாற்றுச் சிறப்புப்பெற்ற மண்டபமாகத் திகழ்கிறது. அங்கு இதுவரை நடைபெற்ற புனிதவைபவங்கள்போல இச்சங்கமும் வெற்றியடையவேண்டும்என இறைவனைப் பிரார்த்திப்போம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாப்பரசரது வத்திக்கான் மாளிகையையும், அதன் நடுநாயகமாகத்திகழும் சம்பேதுருவானவர் மகா தேவாலயத்தையும் படத்தில் காண்க

### தெரியுமா ?

பாப்புமாரைத் தெரிவு செய்வதில் பலசங்கடங்கள் அந்தக்காலத்தில் நிலவிவந்தன: சிறந்தவர் ஒருவரைத் தெரிவுசெய்வதில் ஏற்பட்ட தடங்கல்களால் சிலசமயங்களில் பாப்புதேர்தல் பலமாதகாலமும்நீடித்தது. எனவே இதைத்தடுக்கும் முறையில் 14-வது பொதுச்சங்கத்தில் ஒரு சட்டமியற்றப்பட்டது. பாப்பு ஒருவர் இறந்த பத்தாவதுநாளில் புதியபாப்பு தேர்தல் ஆரம்பமாகுதல் வேண்டும். ஒவ்வொரு கர்தினுலும் தன்னுடன் ஒரு பணியாளைமாத்திரம் வைத்துக்கொண்டபின் கர்தினுல்மாரைச் சிற்றுலயத்தில் அடைத்துக் கதவைத் தாளிட்டுக்கொள்ளவேண்டும். எட்டுத் தினங்கட்குள் அந்தக் கர்தினுல்கள் பாப்புவைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளத்தவறினுல்அவர்கட்குக் கொடுக்கப்பட வேண்டிய உணவில் மாற்றம் ஏற்படுத்தப்படும். வெறும் ரொட்டி, சிறு திராட்சைரசம், தண்ணீர் ஆதியனவே பின்னர் பாப்புவைத் தெரியும்வரை உணவாகும்.



இராயப்பர் மகாலயத்தில் அருளப்பபாப்பரசர் திவ்வியபூசை நிறைவேற்றுகிருர்

# பொதுச்சங்கங்களின் வரலாறும் முடிபுகளும்

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

தல் முதலியன தப்பறையானவை எனப் போதித்த கொள்கைகளை இச்சங்கம் கண்டித்தது.

**11-ம் பொதுச்சங்கம் லாத்தரன்** என்ற இடத்தில் மூன்றும் முறையாக கி.பி. 1179-ம்ஆண்டில் கூட்டப்பட்டது. உவால்டென்செஸ், அல்பிஜென்செஸ் என்ற தப்பறைக் கொள்கைகளை இச்சங்கம் கண்டனம் செய்தது. இக்காலத்தில் பீற்றர் உவால்டோ என்னும் கிறிஸ்தவன் திருச்சபைக்குக் காணி உரிமை இருக்கக்கூடாதென்று தெருவெல்லாம் போதித்துக்கொண்டு திரிந்தார். ஞானஸ்நானம், திவ்விய நற்கருணை தவிர்ந்த ஏனைய தேவதிரவிய அனுமானங்களை ஏற்க மறுத்தார். ஒரு கிறிஸ்தவனுக்குப் பாவங்களை மன்னிக்க அதிகாரம் உண்டு என்று வாதித்தார். பரிபூரணபலன்கள், ஒருசந்திபிடித்தல், பூசகரின் திருச்சடங்குகள், சாவான பாவத்திற்கும் அற்ப பாவத்திற்குமுள்ள வித்தியாசங்களை ஏற்க மறுத்தார். திருச்சுரூபங்களை ஆராதித்தல் அஞ்ஞானமார்க்கம் என்றெல்லாம் வற்புறுத்திஞர்.

அல்பி ஜென்செஸ் என்பவர்கள் இரு கடவுள்கள் இருக்கிருர்களென்றும், பழைய ஏற்பாடு இஸ்பிரீத்துசாந்து சருவேசுரனின் ஏவுதலால் எழுதப்படவில்லை என்றும், குழந்தை ஞானஸ்நானம் தவறுனது என்றும், விவாகஞ் செய்தல் பாவமானகாரியம் என்றும், எவராகிலும் பாவமன்னிப்பை அளிக்கலாம் என்றும் வாதித்தார்கள். மேலும் திரித்துவம், கிறிஸ்துவின் அவதாரம், இரட்சணியம், தேவதிரவிய அனுமானங்கள் யாவற்றையும் மறுத்தனர். எல்லாத் தபக்கிருத்தியங்களும் அனுவசியமானவை என்றும் பாவத்தில் விழுந்த குருவானவர் தேவநற்கருணையை வசீகரம்செய்ய முடியாதென்றும் வாதாடினர்.

**12-ம் பொதுச்சங்கம் லாத்தரன்** என்ற இடத்தில் நான்காம் முறையாகக் கி. பி. 1215-ம் ஆண்டில் இன்னெசென்ற் என்ற பாப்பானவரால் கூட்டப்பட்டது. இச்சங்கம் அல்பிஜென்செஸ் கொள்கைகள் தப்பறையானவை என்று வற்புறுத்தியதுடன் பொதுச்சட்டங்களையும் அமுல் செய்தது.

**13-ம் பொதுச்சங்கம் லேயன்** என்ற இடத்தில் கி. பி 1245-ம் ஆண்டில் கூட்டப்பட்டது. முகமதிய துருக்கர்களிடமிருந்து திவ்வியஸ்தலங்களைக் கிறிஸ்தவபடைகள் மீட்க வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது.

**14-ம் பொதுச்சங்கம் லேயன்** என்ற இடத்தில் இரண்டாம் முறையாகக் கி. பி. 1274-ம் ஆண்டில் பத்தாம் கிறகோரி பாப்புவால் நிறுவப்பட்டது. கிரேக்க சபையாருடன் ஒற்றுமை எத்தனிக்கப்பட்டது. ரெம்பிளார்ஸ் என்பவர்கள் தப்பறையான கொள்கையையுடையவர்கள் என்று தீர்மானிக்கப்பட்டது. இச்சங்கம் இஸ்பிரீத்துசாந்துவானவர் பிதாவிடமும் சுதனிடமுமிருந்தே புறப்படுகிருர் என்ற வேதசத்தியத்தைப் பிரகடனப் படுத்தியது.

**15-ம் பொதுச் சங்கம் வியென்** என்ற இடத்தில் கி. பி. 1311-ம் ஆண்டில் ஐந்தாம் கிளெமெந்து பாப்புவால் கூட்டப்பட்டது. ரெம்பிளார்ஸ் என்ற பரிமேலர் வரிசையை இச்சங்கம் நிராகரித்தது. இச்சங்கம் 1311, 1312-ல் நடைபெற்றது.

**16-ம் பொதுச்சங்கம் கான்ஸ்டன்ஸ்** என்ற இடத்தில் கி.பி. 1414-ம் ஆண்டில் பன்னிரண்டாவது கிறகோரி, பதின்மூன்றும் ஆசிர்வாதப்பர் என்னும் பாப்புமாரால் நிறுவப்பட்டது. இச்சங்கம் மேற்குத்தேசத் திருச்சபையிலிருந்த ஒன்றுக்கு மேற்பட்ட பாப்புமாரைத் தெரிவுசெய்யும் தப்பறையைத் தீர்த்து வைத்தது திருச்சபையின் அதிகாரத்தை மாற்றியமைத்து, ஐந்தாவது மாட்டினைப் பாப்பாண்டவராகத் தெரிவுசெய்தது. ஜோண்விக்ளிப், ஜோண்ஹஸ் என்பவர்களின் தப்பறையான போதனைகள் கண்டனம் செய்யப்பட்டன. **ஜோண் விக்ளிப்** என்பவர் கடவுளும் படைப்புண்ட பொருட்களும் ஒன்று என்றும், விதிவலிமையானது என்றும், தேவநற்கருணையில் கிறிஸ்துநாதர் உண்மையாக இல்லையென்றும், பரிசுத்த பண்டங்களை ஆராதிப்பது தப்பிதம் என்றும், மேற்றிராணித்துவம் ஏற்க முடியாததொன்றென்றும் போதித்து வந்தார். **ஜோண்ஹஸ்** என்பவர் சம்பேதுருவானவர் திருச்சபையின் தலைவர் அல்லவென்றும், கிறிஸ்துநாதரிடமிருந்து குருக்கள் அதிகாரத்தைப் பெறவில்லை என்றும், சாவான பாவம் அதிகாரிகளுக்கு இருக்கும் ஆளும் உரிமையைப் பறிக்கிறது என்றும் போதித்து வந்தார். இச்சங்கம் 1414-ல் துவங்கி, 1418 வரை நடைபெற்றது.

**17-ம் பொதுச்சங்கம் புளொரென்ஸ்** என்ற இடத்தில் 1439-ம் ஆண்டில் நாலாவது இயூஜின் பாப்பரசரால் கூட்டப்பட்டது. இச்சங்கத்தின் விளைவாக மீண்டும் கிரேக்கசபையாருடன் ஒற்றுமை எத்தனிக்கப்பட்டது. இச்சங்கம் 1439-ல் துவங்கி, 1444 வரை நடைபெற்றது.

**18-ம் பொதுச்சங்கம் லாத்தரன்** என்ற இடத்தில் ஐந்தாம் முறையாகக் கி. பி. 1512-ல இரண்டாம் ஜூலியஸ் என்பவராலும் பத்தாம் சிங்கராய பாப்பரசராலும் நிறுவப்பட்டது. குருக்களின் வாழ்க்கையைப் புனிதப்படுத்த வழிவகைகள் ஆலோசிக்கப்பட்டன. திருச்சபையின் அதிகாரம் மீண்டும் வற்புறுத்தப்பட்டது. தடையில்லை; வெளியிடலாம். என்ற அனுமதி நடைமுறைக்கு வந்தது. மேற்றிராணிமாரின் அனுமதிப்படியே மதசம்பந்தமான நூல்கள் வெளிவர வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. இச்சங்கம் 1512-ல் துவங்கி, 1517 வரை நடைபெற்றது.

**19-ம் பொதுச்சங்கம் திரிதென்தீன்** என்ற இடத்தில் 1545-ல் மூன்றும் பவுல்பாப்பரசரால் கூட்டப்பட்டது. இச்சங்கத்தில் பாதிரிமார்க்கத்திற்கு எதிரான ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டன. சென்மபாவம், பாவி நீதிமானுக ஆக்கப்படுவது எப்படி. தேவதிரவிய அனுமானங்கள் முதலியன ஆலோசிக்கப்பட்டன. திருமறையின் வேதசத்தியங்கள் திட்டமாக வரையறுக்கப்பட்டன. இச்சங்கம் லூதர், கல்வின் போன்றவர்களின் தப்பறையான கொள்கைகளைக் கண்டனம் செய்தது. இச்சங்கம் 1545-ல் துவங்கி, இடையிடையே நடைபெற்று 1563-ல் முடிவுற்றது.

**20-ம் பொதுச்சங்கம் வத்திக்கானில்** முதலாம் முறையாக 1869-ம் ஆண்டில் 9-ம் பத்திநாத பாப்பரசரால் கூட்டப்பட்டது. விசுவாசமும், புத்தியும், பாப்பானவரின் அதிகாரம்முதலியனவும் ஆராயப்பட்டன.

**21-ம் பொதுச்சங்கம் வத்திக்கானில்** இரண்டாம் முறையாக 1962-ம் ஆண்டு ஐப்பசிமாதம் 11-ந் திகதி நடைபெறவிருக்கிறது. இச்சங்கம் தற்போதைய பாப்பரசர் 23-ம் அருளப்பரால் கூட்டப்பட்டது. இச்சங்கம் 2-ம் வத்திக்கான் பொதுச்சங்கம்.

பி. ச.

எங்களிடம்

சகலவிதமான சாய்ப்புச் சாமான்கள், கண்ணுடிப் பாத்திரங்கள்,

தொப்பிகள், குடைகள், சூட்கேஸ்கள்,

**பெண்களின் கூந்தல் முடிகள்**

**லேடன்மார்க்**

பெனியன்கள், கால்மேசுகள் முதலியன

**விலை சகாயமாகப் பெற்றுக்கொள்ளலாம்.**

**எஸ். சவிரிமுத்து**

73, காங்கேசன்துறை வீதி,

பெரியகடை, : : யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுச்சங்கத்தின் நோக்கங்கள்

## 1. கிறிஸ்தவ சீவிய மறுமலர்ச்சி

வரப்போகும் இப்பொதுச்சங்கத்தின் நோக்கம் என்ன என்று சம்பூரணமாக அறிவது சற்றே சிரமமானது எனினும், 23-ம் அருளப்ப பாப்புவின் வார்த்தைகளிலே குறிப்பிடலாம். இந்தப் பொதுசசங்கத்தின் முக்கிய நோக்கு, வேதசத்தியத்தை மேலும் பரப்புவதும், விசுவாசிகளின் இடையேஉள்ள சத்திய சீவியத்தைப் பெருக்குவதும், காலத்திற்கேற்றபடி திருச்சபையின் சட்டங்களை மாற்றி அமைப்பதுமாம். மேலும் இந்தப் பொதுச்சங்கம் திருச்சபையின் உண்மைச் சத்தியத்திற்கும், ஒற்றுமைக்கும், அன்பரவணைப்புக்கும் சான்று பகர்ந்து, இந்த வகையிலே அவளின் அரவணைப்பின்னின்று பிரிந்திருக்கும் அனைவரையும் கிறிஸ்துநாதர் ஆசிக்கும் ஒற்றுமையில் வந்துசேர வருந்தி அழைக்கும் குரலொலியாயும் இருக்கும்.

வங். யெய்கர் ஆண்டகை இவற்றை நான்காகப் பிரிக்கிறார்:

1. திருச்சபையைப்பற்றிய வேதசத்திய ஆராய்வும், நாஸ்தீக கொள்கைகளுக்கு திருச்சபையின் விடையும்.
2. ஆசிய ஆபிரிக்க கண்டங்களின் சுதந்திர எழுச்சியினாலும், தேசிய மறுமலர்ச்சியினாலும் உண்டாகியுள்ள வேதப்பரம்புதல் பிரச்சனைகள்.
3. இந்த நவீன விஞ்ஞான யுகத்தில் சத்தியவளர்ச்சிக்குத் தடையாயுள்ள காரணங்கள்.
4. தற்கால உலகின் பாவமாலயைகளால் கிறிஸ்தவ நன்நடத்தைக்கு ஏற்படக்கூடிய அபாயமும், அதை வெல்லும் முறைகளும்.

எனினும் சுருங்கச்சொல்லின் பொதுச்சங்கத்தின் முக்கிய முதல்நோக்கு தேவபிரசைகளின் தெய்வீக வாழ்க்கையின் மறுமலர்ச்சியேயாம். இதைத்தான் பொதுச்சங்க செபமும் வற்புறுத்துகிறது.

"இத்திருச்சங்கத்தின் பயனாகச் 'சுவிசேஷமாகிய' நற்செய்தியின் நறுமணம் நாடெங்கும் பெருகவும், அதன் நற்பலன் மானிட சமுதாயத்தை மேன் மேலும் நலனடையப் பண்ணவும் செய்யும். விசுவாசம் அஞ்ஞானநாடுகளிலே புத்துணர்ச்சியுடன் பரவவும், எம்மத்தியில் இவ் உயிருள்ள விசுவாசம் ஆழமாக வேரூன்றவும் செய்யும். மேலும் எம் சீவியத்தில் நாம் எம்முடைய விசுவாசத்தின் உண்மைகளை வேரூன்றி எம் கிறிஸ்துவ சீவியத்தைப் புதுப்பிக்கவும் உதவியருளும்.

## 2. கிறிஸ்தவ ஒற்றுமை

பாவத்தினால் பிளவுபட்ட மனித குலத்தை, தம் அன்பில் இணைத்து ஒரு தெய்வீக குடும்பத்தில் சேர்த்து ஒற்றுமைப்படுத்தவே யேசுமனிதனாக வந்தார். எல்லா சிருட்டிப்பையும், எல்லா மனிதரையும் யேசுவில் ஒன்று சேரப்பண்ணுவதே திருச்சபையினதும் அலுவலாம். கிறிஸ்துவே, கடைசி இராப்போசனத்தில், ஒற்றுமையை, தம் சீடர்களின் சின்னமாக அளிக்கிறார்.

"அவர்கள் எல்லோரும் ஒன்றாயிருக்கவும், பிதாவே தேவரீர் என்னை அனுப்பினீரென்று, உலகம் விசுவசிக்கவும், நீர் என்னிலும் நான் உம்மிலும் இருக்கிறதுபோல, அவர்கள் நம்மிடத்தில் ஒன்றாயிருக்கவும் வேண்டுகிறேன்" (அரு. 17, 21).

கிறிஸ்து தம் சீடர்களைவிட்டுப்பிரிய நேரம் நெருங்கியதும், ஒற்றுமைக்காகவே மிகவும் உருக்கமாகத் தம் பிதாவை வேண்டினார்.

"நாம் ஒன்றாயிருக்கிறதுபோல, அவர்களும் ஒன்றாயிருக்கும்படிக்குத் தேவரீர் எனக்குத் தந்தருளின மகிமையை அவர்களுக்கும் கொடுத்தேன். அவர்கள் ஒற்றுமையில் சம்பூரணமாயிருக்கவும், நீர் என்னை அனுப்பினீரென்றும், என்னை நீர் சிநேகித்ததுபோல அவர்களையும் சிநேகித்தீரென்றும் உலகம் அறிந்துகொள்ளவும், நான் அவர்களிலும் நீர் என்னிலும் இருக்கவேண்டும்."

"அவர்கள் ஒன்றாயிருக்கவும்" என்ற கிறிஸ்துவின் பிரார்த்தனையில் எவ்வளவு பரிதாபந் தொனிக்கிறது? ஏதோ, கிறிஸ்து தன் மந்தைகளிடையே, பரிதாபகரமான, பயங்கரமான பிளவுகள் ஏற்படப்போகிறதென்று உணர்ந்ததுபோல் உண்மை மேய்ப்பனைவிட்டுப் பிரிந்து அறியாமையினாலேயோ, அயோக்கியத்தனத்தினாலேயோ, அலையும் ஆடுகளுக்கு, இந்த ஆயனின் அபயக்குரல் எட்டாதா?

கிறிஸ்து தம் சத்திய மார்க்கத்தின் சின்னமாகக் கொடுத்த அதே ஒற்றுமையை, நாம் உலகத்துக்கு எடுத்துக் காட்டமுடியாமல் தவிக்கிறோம் இன்று. ஒற்றுமையின் உண்மைச் சின்னமின்றி அவரது சத்தியத்திற்குச் சம்பூரணமாகச் சாட்சிபகரமுடியாமல் ஏங்குகிறோம். ஆகையால், உண்மை மந்தையை விட்டோடிய மற்ற ஆடுகளும் யேசுவின் ஒற்றுமையில் வந்து சேர நாம் எவ்வளவோ உழைக்கவேண்டும், எவ்வளவோ தேவனை வேண்ட வேண்டும். பொதுச்சங்கத்தின் முதல் குறிக்கோள் இதுவில்லாவிடினும், கிறிஸ்துவ ஒற்றுமைக்கு இப்பொதுச் சங்கம் பெரும் உதவிபுரியும் என்பதில் அச்சமேயில்லை. பாப்பரசர் இவ்விடயத்தில் எவ்வளவோ கரிசனை செலுத்துகிறார். ஒற்றுமைக் குறிக்கோளுக்காகவே தனிப்பட்ட ஒரு காரியாலயத்தையும் ஏற்படுத்தியிருக்கிறார்.

"கிறிஸ்து என்னும் நாமத்தில் பெருமை அடைந்தாலும், யேசுக்கிறிஸ்துவின் ஒரே உண்மையான மந்தையைச் சேராத மற்ற அநேக ஆடுகளும், ஒரே மேய்ப்பரின்கீழ் ஒற்றுமைப்பட்டு, இம்மந்தையில் அமர வேண்டும் என்றும் வேண்டுகிறோம்."


இலங்கையில் முதன்முதல் அச்சேறிய

**சம்ஸ்கிருத இலக்கணப் பயிற்சிப் புத்தகம்**

(உயர்தர வகுப்புகளுக்குரியது)

**நியாய சிரோமணி K. சுப்பிரமணியன்**
அவர்களால் வெளியிடப்பட்டுளது.

**'ஆசீர்' வெளியீடுகள் - விலை விபரம்**

| | | | |
|---|---|---|---|
| **படிமுறை அட்சரகணிதங்கள் :** | | சம்ஸ்கிருத இலக்கணப் பயிற்சிப் புத்தகம் | 6-00 |
| 6ஆம் வகுப்புக்கு உரியது | 1-60 | இலங்கைப் பூமிசாத்திர வினா விடை | 1-25 |
| 7 ,, ,, ,, | 1-60 | நாடோடிப் பாடல்கள் | 1-50 |
| பயிலுந்தமிழ் 1ஆம் பாகம் | 2-00 | சிலம்பு பிறந்தது | 1-50 |
| **இலக். விளக். பயிற்சியும் :** | | வன்னியின் செல்வி | 1-50 |
| 4ஆம் வகுப்புக்கு உரியது | -70 | எஸ்தாக்கியர் நாடகம் | 1-50 |
| 5 ,, ,, ,, | -80 | ஆசிரியர் 'றெக்கோட்' புத்தகம் | 2-00 |
| **பிற நூல்கள் :** | | "விவேகி" மாத இதழ் வருடசந்தா | 4-00 |
| சுந்தரகாண்டம் காட்சி-நிந்தனைப்படலம் | 1-75 | | |
| G. C. E. பாஷை மாதிரி வினா | 1-25 | | |
| புது உலக சரித்திரம் | 7-75 | | |

**ஆசீர்வாதம் அச்சகம் — புத்தகசாலை**

**32, கண்டி வீதி, — யாழ்ப்பாணம்.**


தொலைபேசி : 274


# சங்கத்தின் உயிர்நாடி இஸ்பிரீத்துசாந்து

இந்தத் தெய்வீகத் தொழிலைத் திருச்சபையின் அதிகாரிகள் நிறைவேற்றுவது தம் சுயமனித சக்தியாலல்ல; ஆனால் எந்தத் தூய ஆவி திருச்சபையின் உயிராயிருந்து அதைச் சரிவர நடத்துகிறாரோ! எந்த ஆவியைப் பற்றி கிறிஸ்து: "நானும் பிதாவை மன்றாடுவேன்; அவர் என்றென்றைக்கும் உங்களோடுகூட வசிக்கும்படியாகத் தேற்றுகிறவராகிய வேறொருவரை உங்களுக்குத் தந்தருளுவார். அவரே சத்திய இஸ்பிரீத்துசாந்துவானவர்; உலகம் அவரை ஏற்றுக்கொள்ள மாட்டாது. ஏனெனில், அது அவரைக் காணகிறதுமில்லை, அறிந்து கொள்கிறதுமில்லை. நீங்களோ, அவரை அறிந்துகொள்வீர்கள். ஏனெனில், அவர் உங்களிடம் வசிப்பார், உங்கள் உள்ளத்திலும் இருப்பார்" (அரு. 14:16—17) என்று குறிப்பிட்டாரோ, அதே இஸ்பிரீத்துசாந்துவின் உதவியால்தான் இந்தத் தெய்வீகத் தொழிலை நிறைவேற்றுவது. ஆதலால், பொதுச்சங்கத்தை மற்ற உலக சங்கங்கள் போன்று கருதுவது பெரும் துரோகமாம். இஸ்பிரீத்துசாந்துவின் தூண்டுகோலின்மீது, அவரின் மேற்பார்வையின்கீழ் அவரின் தெய்வீக அருளோடு கூடும் சங்கம் என்று கருதுவதே தகுதியும் உண்மையுமாகும், இது மனிதனின் செயலல்ல; ஆனால், தேவனின் செயல். இருள் சூழும் இக் கலியுலகிலே, தேவ அருள் அகன்று, அயோக்கியர்கள் பெருகும் இப்பாவ ஆழியிலே, இறைவனின் அருளை அள்ளி வீச, அன்பு, ஆசாரம், அமைதி எம்மண்டை (உலகண்டை) அதிகரிக்க இப்பொதுச் சங்கத்தைக் கூட்டப்போகிறார் இஸ்பிரீத்து. இதற்காக அவரை நாம் எவ்வளவு பிரார்த்திக்க வேண்டும். அவரின் தூயஆவியின் அருள் இதற்கு எவ்வளவோ அவசியம் என்று நன்குணர்ந்துதான் பாப்பரசர், பொதுச்சங்கத்தின் கருத்துக்கென எழுதிய செபத்தில் இஸ்பிரீத்துசாந்துவின் உதவியை வெகு உருக்கமாக வேண்டுகிறார்.

"திருச்சபையை என்றென்றும் பொய்மாயைகளில் நின்று காத்து, நல்வழியில் நடத்தப் பரமபிதாவால், யேசுவின் பெயரால் அனுப்பப்பட்ட தூய ஆவியே; நீர் உம்முடைய அருளின் கொடைகளை வரப்போகும் இப்பொதுச்சங்கத்தின்மீது அள்ளி வீசியருளும்.

"அரிய ஆறுதலே, அன்புள்ள வழிகாட்டியே, பரிசுத்த பாப்பரசரின் வேண்டுகோட்கிணங்கி, இப்பொதுச் சங்கத்தில் ஒன்றுசேரவிருக்கும் எம் மேய்ப்பர்களின் உள்ளங்களை உம்முடைய தெய்வீக ஞானத்தின் ஒளியால் நிரப்பியருளும்."



## 20-வது பொதுச் சங்கம்

| | |
|---|---|
| **இடம் :** | வத்திக்கான் — இங்கு நடைபெற்ற முதலாவது பொதுச்சங்கம் இது. |
| **காலம் :** | 1869 மார்கழி 8. |
| **திருச்சபைத்தலைவர் :** | ஒன்பதாம் பத்திநாதர். |
| **நடந்த கூட்டங்கள் :** | 8 பொதுக்கூட்டங்கள். |
| **பங்குபற்றியோர் :** | 47 கர்தினல்மார், 700 மேற்றிராணிமார், 40 சந்நியாசசபைத் தலைவர்கள். |
| **தீர்மானங்கள் :** | 1. கத்தோலிக்க விசுவாசம் என்ற சத்தியங்களின் தொகுப்பு. 2. பாப்புவின் தலைமைஸ்தானம், வழுவாவரம் என்பவைபற்றிய தீர்மானங்கள். |

20-வது பொதுச்சங்கம் நடைபெற்றுக்கொண்டிருக்கும்போது விக்டர் இம்மானுவேலின் படைகள் கரிபால்டியின் தலைமையில் ரோமாபுரியை வலுவந்தமாகக் கைப்பற்றின. பாப்புவோ வத்திக்கானில் கைதியாக இருக்கவே தீர்மானித்தார். அந்நகரைவிட்டு வெளியேற மறுத்தார். வத்திக்கான் பொதுச்சங்கமும் ஐப்பசி 20-ந் தேதி காலவரையின்றி ஒத்திவைக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

---

களங்கமற நினைப்பதும், நினைத்ததைக் களங்கமறப் பேசுவதும், பேசுவதைப் பிழையறச் செய்துமுடிப்பதும்தான் நல்ல கிறிஸ்தவனின் சீவியலட்சணமாகும்.

# ஐந்துகாய வரமாது இறந்துவிட்டாள்

பவேரியாவில் கிராமப்புறத்த வளும், 1926-ம் ஆ தொடக்கம் ஐந்துகாயவரம் பெற்றிருந்தவளு மான தெரேசா நியுமன், பிறந் தகமான கோனேர்ஸ் றூத்தில் 64-ம் வயதில் காலஞ்செல்லலாயி னள்.

வேதசாத்திரிகள், வைத்தியர், உளஆய்வாளரும் தெரேசாவுக் குக்கிடைத்த ஐந்துகாயவரம் நரம்புத்தளர்ச்சியாலும் மனக் கோளாறினலும் உண்டானதா? அல்லது தேவவரமா என்பதை இன்றுவரை அறுதியிட்டு முடிபு கூறவில்லை.

இவள் 1926-ல் இருந்து உணவு எதுவும் அருந்தியதில்லை எனவும், தண்ணீர்மாத்திரம் பருகுவாள் எனவும் கூறப்படுகிறது. நற்கரு ணையே அவளுக்கு ஆன்ம, சரீர உணவாயிற்று என்க.

பத்துப் பிள்ளைகளில் மூத்தவ ளான தெரேசா இளமையில் சா தாரணமாகவே காணப்பட்டாள் தாதியாக வேலைபார்க்க எண்ணி யிருந்தவளுக்கு 20-ம் வயதில் பற் றிய நெருப்பைநூர்க்கப் பிரயா சைப்பட்டபொழுது முதுகெலும் பில் நோவுஒன்று உண்டானது. இன்னொருமுறை விழுந்து தலை யில் காயம்பட்டாள். இதன்பின் கண் குருடாகி பாரிசவாதமும் வந்தது. சின்னத்தெரேசம்மா ளிற்கொண்ட பக்தியினுல் இவள் குணமடைந்தாளாம். தான் அர்ச். தெரேசம்மாளினதும் கர்த்தரு டைய பாடுகளினதும் காட்சி பெற்றதாகக் கூறினுள்.

ஒவ்வொரு பெரியவெள்ளியி லும், வேறு வெள்ளிக்கிழமைகளி லும் ஐந்துகாயங்களும் புது இரத்தக் கறையுடன் தோன்றும். இவ்வேளை அவள் பரவசநிலையி லிருப்பாள். பிந்தியகாலங்கள் ஆயிரக்கணக்கான மக்கள் இவ ளைத் தரிசிக்கச்சென்றனர். பர வசநிலையில் அவள் பேசிய அந் நியமொழியை ஆண்டவர் பேசிய அரமைக்மொழி என்பர் அறிஞர். பின்பு உத்தான ஞாயிறுவரை பிரஞ்ஞையற்றநிலையில் காணப் படுவாள்.

இதுபற்றி உத்தியோகதோர ணையில் திருச்சபை ஆராய முயற் சித்தபொழுது அவளுடைய தந் தை மறுத்துவிட்டார். 1936-ல் கருதினுல் போள் ஹாவர் அவளு டைய அறையில் பூசை ஒப்புக் கொடுத்து அவளுக்குச் சற்பிர சாதம் கொடுத்தார். திருச்சபை இவ்விசேஷம்பற்றிச் சாதகமாக வோ பாதகமாகவோ ஒன்றுங் கூறவில்லை.

## பொதுச்சங்கம் எவ்விதம் இயங்கும்?

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

அகஸ்ரின்: ஆம், திருச்சபையின் சடங்கானுசார முறைப்படியான வைப வங்கள், ஆடம்பரச் சடங்குகள் முதலியனவும் உண்டு. இந்த வைப வங்கட்கு எமது ஆயர்கள் திருச்ச பையின் உத்தியோகரீதியான ஆடை யணிகளுடன் பிரசன்னமாயிருப்பர். கூட்டங்களின்போது தங்கள் சாதா ரண மேலங்கிகளையே தரிப்பர்.

அன்ரன்: மன்னித்துக்கொள்ளுங் கள். நீண்டநேரம் கூட்டங்கள் நடப்ப தாகச் சொன்னீர்களே. ஒருநாளில் எத்தனை மணித்தியாலங்கள் கூட்டம் நடைபெறும்.

பெரியண்ண: ஒருநாளுக்கு எழு மணித்தியாலவீதம் கூடுவது எனத் தீர்மானித்திருக்கிறூர்கள். கிழமைக்கு ஐந்துதினங்கள் கூடுவார்கள். தினசரி காலை 9-15மணிக்கு ஆயர்கள் மகாலய மண்டபத்துக்கு வந்துசேர்வர். 9-30 மணிக்கு ஆயத்தமணி அடிக்கப்படும். 11-15-க்கு பதினைந்து நிமிட ஓய்வு தரப்படும். 11-30-க்கு மீண்டும் நிகழ்ச் சிகள் ஆரம்பமாகி 1-30 மணிக்கு மதிய உணவுக்காக ஒத்திவைக்கப் படும். பின்னர் பிற்பகல் 4-30மணிக்கு கூட்டநிகழ்ச்சிகள் ஆரம்பமாகி மாலை ஏழுமணிவரை நீடிக்கும்.

அப்பா: நிகழ்ச்சிகளையும், உரை யாடல்களையும், பேச்சுகளையும் பதிவு செய்யச்சுருக்கெழுத்தாளர்கள் அமர்ந் திருப்பார்களல்லவா?

அகஸ்ரின்: ஆம். பொதுச் சங்க நிகழ்ச்சிகளனைத்துமே நாடாவில் பதிவுசெய்யப்படும். இதைத்தவிர 42 குருமாரும் பல குருத்துவபயிற்சி பெறும் சந்நியாசகர்களும் சகல நிகழ்ச் சிகளையும் சுருக்கெழுத்துமூலம் பதிவு செய்வர். லத்தீன் மொழியில் பதிவு செய்பவர்கள் சுருக்கெழுத்துமுறையில் நிமிடத்துக்கு 90 சொற்களைத் தட்டச் சில் பதிப்பர். லத்தீனில் உள்ள பேச்சுகளை ஆங்கிலத்தில் குறிப் பெடுக்கப் பதினொருபேரும், பிரான்சிய மொழியில் பதிக்க எட்டுப்பேரும், ஸ்பானியமொழியில் எழுத மூவரும், ஜேர்மானிய மொழியில் தயாரிக்க ஐவரும், இத்தாலிய பாஷையில் பதிக்க பதினுலுபேரும் நியமிக்கப்பட்டுள் ளனர். இவர்கள் அனைவரும் கடந்த பங்குனிமாதம் தொடக்கம் இந்த வேலையில் பயிற்சிபெற்றுவருகின்றனர்.

நிர்மலா: ஒவ்வொரு தீர்மானமும் வாக்கெடுப்பின் மூலம்தானே நிறை வேற்றப்படும். அப்படியாயின் மூவா யிரம் அங்கத்தவர்களும் வாக்குச் சீட்டுப்போட்டு எண்ணிக்கணக்கெடுக்க பலமணித்தியாலங்கள் செல்லுமே.

பெரியண்ண: ஆம். ஆயின் கடந்த அமெரிக்க தேர்தலில் செய்ததுபோல எலக்ரோனிக் எந்திரமுறையான கணக் கெடுப்புகளால் நேரத்தைச் சுருக்கிக் கொள்வார்கள். வாக்குச்சீட்டுகள் எந்திர கணக்கெடுப்புக்கு உரிய முறை யில் துளையிடப்பட்டிருக்கும். மெகா ஞெகிராவ்முறையில் இந்தவாக்கெடுப்பு அமுல் நடாத்தப்படும். ஒவ்வொரு சீட்டிலும் வாக்களிப்பவரின் பெயர் எழுதுவதற்காக இடம்விடப்பட்டிருக் கும். பக்கத்தில் ஆசனத்தின் இலக் கத்தைக் குறிப்பிடுதல் வேண்டும். கீழே மூன்று பகுதிகளிருக்கும். முத லாவது பகுதியில் ஆம்என்றும், இரண் டாவது பகுதியில் இல்லையென்றும், மூன்ருவது பகுதியில் பகுதியானது என்றும் இருக்கும். ஆயர்கள் தாம் விரும்பிய பகுதிக்கு நேரே அடையா ளமிட்டுக் கொடுப்பர்.

கார்மெலா: வாக்குகளை இயந்திரமா எண்ணிக் கணக்கிடும்.

பெரியண்ண: பதினேழு குருத்துவ பயிற்சிபெறும்மாணவர் வாக்குச்சீட்டுக ளைச் சேர்த்துச்சென்று இயந்திரத்தி லிடுவர். இந்தஇயந்திரம் 9000 சீட்டு களை ஒருமணித்தியாலத்தில் கணக்கிடு வதற்கு வல்லது. ஆகவே, வாக்களித்த சுமார் 20 நிமிடங்களில் முடிவுகள் அறிவிக்கப்பட்டுவிடும். இதனுல் எவ் வளவோ நேரம் மிச்சப்படுத்தப்படும்.

அம்மா: எவ்வளவு பெரிய முயற்சி. பெரிய செல்வந்தர் வீட்டுக் கலியாணம் போல, எல்லாம் நல்லபடியாக நிறை வேற வேண்டுமென்று மன்றுடுவது எங்கள் கடமையல்லவா?

## பாப்புவுக்குப் பதில் ஆணையாளர்

ருஷியா ஆக்கிரமித்திருக்கும் நாடுகளில் ஒன்றுன லித்துவேனி யாவிலுள்ள பொதுவுடைமை அரசாங்கம் திருச்சபையின் நிர் வாகமுறையை மாற்றிப் பரிசுத்த ஸ்தானத்துக்குப் பணிவில்லாத சுயஆட்சி நிர்வாகமொன்றை ஸ்தாபிக்க முயன்றுவருகிறது.

அண்மையில் பனவேய்ஸ் மேற் றிராசனப் பரிபாலனர் ஸ்ரெப் பொன விச்சியுஸ் ஆண்டகை யைப் பலாத்காரமாய் நீக்கிவிட் டது. பரிசுத்தஸ்தானம் அப்பத விக்கு சிட்லவுஸ்கஸ் குருவான வரை நியமித்தபொழுது வழி பாட்டு இலாகாத்தலைவர் அக் குருவானவரைத் தூரமான தோர் கிராமத்துக்குக் கடத்தி விட்டார்.

திருச்சபை அதிகாரிகள் விசா ரணைப்பங்குகளுக்கு நியமிக்கும் குருமாரை அங்குசெல்ல இடங் கொடுப்பதில்லை. பிறபங்குகளில் நடக்கும் மதச்சடங்குகளுக்குச் செல்ல அரசாங்கஉத்தரவுப்பத் திரம் வேண்டியிருக்கிறது. யாத் திரைகளைத் தடைப்படுத்துவதே நோக்கம். ஆண்டுதோறும் நத் தார் விழாக்காலத்தில் குருமார் விசுவாசிகளைச் சந்தித்து வந்த தையும், அத்தருணத்தில் விசுவா சிகள் தமது பங்குக் குருமாருக் குக் கொடுத்துவந்த பணஉதவி யையும் தடுத்துவருகின்றூர்கள். பூசைப்பரிசாரகரை உபயோகிப் பதும் குற்றமாகக் கருதப்படு கின்றது. பூசைக்குச் சமுகமளிப் போர்தொகை 50வீதம் குறைந்து விட்டது.


## ஓர் அரிய சந்தர்ப்பம்!

உங்களுக்குத் தேவைப்படக்கூடிய
கீழ்க்கண்ட சுரூபங்கள் எங்களிடம் கிடைக்கும்.

● அர்ச். யூதா ததேயு

இதன் மாதிரி கம்பஹா, இந்திகொல்லை கோவிலின்
வண. பிதா சுப்பீரியர் அவர்களால் அங்கீகாரம் பெற்று
அக்கோவிலுக்குச் செய்துகொடுக்கப்பட்டது.

அளவுகள்: 24", 36", 42", 60".

● சதாசகாய மாதா அளவுகள்: 24", 48".

● வியாகுல மாதா அளவு: 60".

● சிலுவைப்பாதை செற் அளவுகள்: 42" × 36".

மற்றும் விபரங்களுக்கு எங்களை விசாரிக்கவும்

த நிவஸ் ஸ்டோர்ஸ்,
சுரூபங்கள் தயாரிப்பாளர்கள்,
106, மெயின்வீதி, நீர்கொழும்பு.


# பொதுச்சங்கத்தில் கலந்து கொள்வோர்

இன்று பலர் ஒன்றுகூடி ஒருகாரி யத்தைச் செய்வதே வழக்கமாகிவிட் டது. தனிப்பட்டமுறையில் செய்வது முறையற்றதுமாத்திரமல்ல, அவ்வளவு கனி கொடுப்பதாயும் தெரியவில்லை. எனவேதான், இன்றைய சமுதாயத் திலே எங்குபார்த்தாலும் பல சங்கங் கள் காணப்படுகின்றன. வேலணை வெங் காய அபிவிருத்திச் சங்கம், கரையூர் மெய்விவாக லாபநிதிச்சங்கம், சின்னக் கடை பலசரக்கு ஐக்கியசங்கம் ....... என்று பெரியனவும் சிறியனவுமாகச் சங்கங்கள் எழும்பிவிட்டன. நாட்டின் ஆட்சியே சங்கமுறையில் ஏற்பட்டுவிட் டது. விசேடமாக ஜனநாயக ஆட்சி முறையிலே, மக்களே தமக்கு விரும்பி யோரைத் தெரிந்து கூட்டு ஆட்சியை ஏற்படுத்துகின்றனர். அதாவது நாட் டின் ஆட்சி மக்களின் மனப்பான்மை யைக் கொண்டு தெரியப்பட்ட ஆளும் கட்சியின் கையில் இருக்கிறது. ஆனல் திருச்சபையின் பொதுச்சங்கமும், பாராளுமன்ற முறையில்தான் கூடப் படுகிறதென்றெண்ணுவது தப்பாகும். [illegible]சமுதாயங்களை ஆட்சிபுரிப வர்களுக்கு, அவர்கள் அதிகாரமெல் லாம் மக்களிடம் இருந்தே கிடைக்கின் றன. ஆனல், திருச்சபையின் மேய்ப் பர்களுக்கு மக்களிடம் இருந்தல்ல அதிகாரம் கிடைக்கிறது. ஏனெனில், திருச்சபையானது மக்களைக்கொண் டுள்ள சம்பூரண சமுதாயமானுலும், அது தேவபிரசைகளின் சமுதாய மென்பதை நாம் மறக்கவேகூடாது. அதாவது, நாமல்ல திருச்சபையை ஏற்படுத்தியது, தேவனே அதை அமைத்தார். தேவன் தம் அளவு கடந்த அன்பின் நிமித்தம், தம்குமார ணுகிய யேசுவின்மூலம், ஈனமனித ராகிய எம்மைத் தம் பிரசைகளாக்கி (எம்மை) யேசுவின்கீழ் ஒன்றுகூட்டிய சமுதாயம் திருச்சபை. ஆகவே, இந்த தேவபிரசைகளை ஆண்டுநடத் தும் அதிகாரம், எம்மிடம் இருந்தல்ல எம் அதிகாரிகளுக்குச் செல்கிறது. ஆனல், தேவனிடம் இருந்து எம் மேய்ப்பர்களுக்குக் கிடைக்கிறது. இத னுல்தான் மேற்றிராணிமார் மாத்தி ரமே இந்தப்பொதுச் சங்கங்களுக்கு அழைக்கப்படுகின்றனர். வேதசாஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திர ஞானிகளும், நிபுணர்களும் அழைக்கப்படுகின்றனர். ஆயின் அவர்கள் மேற்றிராணிமாருக்குத் தம் அறிவால் உதவிகளைமட்டுமே அளிப்பர். அவர்களுக்கு வாக்குரிமைகிடையாது.

எனவே, விசுவாசிகளுக்கும் பொதுச் சங்கத்திற்கும் ஒரு தொடர்பும் இல்லை என்று எண்ணுவது தப்பு. ஏனெனில், விசுவாசிகள் நேர்முகமாகப் பொதுச்சங்கத்தில் பங்குபற்றுவிடினும், தங்கள் தங்கள் மேய்ப்பர்களின் (மேற்றிராணிமாரின்) மூலமாக இச்சங்கத்தில் பங்குபற்றுகிறார்கள். ஞானஸ்நானத்தின் அருளினால் விசுவாசிகள் அனைவரின் ஆத்துமங்களிலே இஸ்பிரீத்துசாந்து குடியிருந்து, அவர்களுக்குக் கிறிஸ்துவின் சத்தியத்தை தெரிவிக்கிறதாலும், ஞானஸ்நானத்தினால் தம் மேய்ப்பர்களுடன் ஒரேதெய்வீக குடும்பத்தைச் சேர்ந்து, தங்கள் கிறிஸ்துவ வாழ்க்கையாலும், சொல் செயலாலும் கிறிஸ்துவின் சத்தியத்தின் உயிருள்ள சாட்சிகளாய் இருப்பதாலும், திருச்சபையின் மரபை (Tradition)த் தவிர இவர்களுடைய சாட்சியமே முக்கியமானது. (Gaegher) தங்கள் மந்தைகளின் உயிருள்ள சத்தியத்திற்கு சான்றுபகரவே மேற்றிராணிமார் இங்கு அழைக்கப்படுகின்றனர். ஆதலால், விசுவாசிகளுக்கும் பொதுச்சங்கத்திற்கும் ஒரு தொடர்பும் இல்லையென்று எண்ணுவது தப்பு.

தங்கள் மந்தைகளின் விசுவாசத்திற்குச் சாட்சிபகருவது மாத்திரமல்ல இம்மேய்ப்பர்களின் தொழில். ஆனால், சத்தியத்தின் தனிப்பொறுப்பாளிகள் என்றமட்டிலே சத்தியத்தைக் கால தேசவேறுபாடுகளுக்குத் தகுந்தபடி எடுத்துக்காட்டி ஒப்பிட்டு, விளக்கி சரித்திர ரீதியிலே எழும் பல புதிய பிரச்சனைகளுக்கு, புதுவழிகள் திறந்து, நல்லதை கெட்டதிலிருந்து பிரித்துக் காட்டி, தங்கள் தங்கள் மந்தைகளைச் சத்திய வழியிலே ஒழுக உதவுவதும் அவர்கள் தொழிலேயாம். இத்தொழில் பொதுச்சங்கத்தின் அதிகார சக்தியை நன்கு விளக்குகிறது. நல்லதை மெச்சுவதும், கெட்டதை வழுவாவரத்துடன் கண்டிப்பதுமான வேலை தேவனுக்கொத்ததல்லவா?

# மற்றொரு கிறீஸ்து

1182-ம் வருடம் அர்ச். அசிசி பிரான்சீஸ்கு என்பவர் பீற்றர் பெர்னார்டீன், பிக்கா என்னும் செல்வந்த தாய், தகப்பனுக்கு மகனாய், தரித்திரத்தின் எடுத்துக்காட்டாய் மாடடைகுகையில் பிறந்தார். இவர் கற்க வேண்டிய சாஸ்திரம் யாவும் கற்றதும் இவரது தகப்பனது வியாபாரத்தை நடத்திக்கொண்டு வந்தார்.

இவர் செல்வந்த குடும்பத்தைச் சேர்ந்தவராகையால் மேட்டிமையான வஸ்திரந்தரித்து தமது ஓய்வு நேரங்களை ஆடல், பாடல்களில் செலவழித்து வந்தார். தம்மிடம் ஆண்டவரின் நாமத்தால் பிச்சைகேட்கும் யாவருக்கும் தாராளமாகப் பிச்சை கொடுப்பதாகப் பிரதிக்கினை எடுத்துக் கொண்டு பிச்சைக்காரருக்குத் தாராளமாகத் தான, தருமம் செய்துவருவார்.

இவர் யேசுநாதருடைய பாடுபட்ட சிலுவையின்முன் ஒருநாள் செபம் செய்து கொண்டிருக்கையில் யேசுநாதர் புதுமையாக இவருடன் பேசி, பாழடைந்து போயிருக்கும் தமது கோவிலைச்செப்பனிடும்படியாகக் கேட்டார். பீற்றர் பெர்னார்டீன் தன்மகன் தனது ஆஸ்தியை வீணாகச் செலவு செய்வதாலும், புத்தி, சுவாதீனமில்லாதவனைப்போல் நடப்பதாலும், மேற்றிராணியாரிடம் தன் சொத்தில் தன் மகனுக்குப் பங்குகொடுக்கமாட்டேன் என முடிபுசெய்தான். பிரான்சீஸ்கு தான் அப்போது உடுத்தியிருந்த உடுப்பை முதலாய் மேற்றிராணியாரின்முன் உரிந்து தகப்பன்கையில் கொடுத்து இனிமேல் பீற்றர் பெர்னார்டீன் அல்ல என்பிதா; "பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே" என்று தாராளமாய்ச் சொல்லுவேன் என்று சொல்லி, ஒரு சாக்கை உடுத்தி அரையில் ஒரு கயிற்றைக் கட்டிக்கொண்டு, பிச்சைக்காரருடன் பிச்சையெடுத்து, சந்தோஷமாகச் சாப்பிட்டு, தவத்தைப் பிரசங்கித்து வந்தார்.

இவரது பிரசங்கத்தையும், முன்மாதிரிகையையும் கண்ட அநேக செல்வந்தர்கள் இவருக்குச் சீஷராக வந்தனர். இவருடைய முதல் பன்னிரு சீஷர்களில் அருளப்பன் தெக்கப்பல்லா என்பவன் யூதாசைப்போல் சபையை விட்டு, விட்டு நான்றுகொண்டு செத்தான். தாழ்ச்சியின் நிமித்தம் குருப்பட்டம்பெறத் தான் தகுதியற்றவரென்று சீவியகாலமெல்லாம் தியாக்கோனாகவேயிருந்தார். இரவில் வெகு நேரமாக யேசுநாதரின் பாடுகளைப் பற்றித் தியானித்துக் கண்ணீர் விடுவார். யேசுநாதரின் பாடுகளின்மேல் இவருக்கு இருந்த பத்திக்காக, இவரின் திருச்சரீரத்தில், யேசுநாதரின் ஐந்து திருக்காயங்களும் பதிந்திருந்தது. ஆகையால் இவர் ஐந்துகாயப் பிரான்சீஸ்கு என அழைக்கப்படுகிறார். இத்திருக்காயங்களால் அநேக புதுமைகள் நடந்தேறின.

இப்புனிதர் இயற்கையைக் கொண்டு சருவேசுரனைத் துதிப்பதில் மிகவும் பேர்போனவர். சூரியன், சந்திரன், பூமி, நெருப்பு, தண்ணீர் முதலியவைகளைத் தன் தாய், தந்தை, சகோதரன், சகோதரி என அழைப்பார். திருச்சபையில் வழங்கிவரும் "போர்சியங்குலா" பரிபூரணபலனை அடைந்து கொடுத்தவரும் இவரே. பார்புகழும் பதுவை அந்தோனியார் இவரால் உண்டாக்கப்பட்ட சபையின் ஓர் அங்கத்தவரே. இவர் சாகும்போது யேசுநாதரைக் கண்டுபாவிக்க வெறுந்தரையில் வஸ்திரமின்றிப் படுத்து உயிர்விட்டார். இவரது சரீரம் நரகமேடு என்னும் பாதகரைப் புதைக்கும் ஸ்தலத்தில் இவரது விருப்புக்கிணங்கப் புதைக்கப்பட்டது. அர்ச். பிரான்சீஸ்கு எல்லாவற்றிலும் யேசுநாதரைப் பின்பற்றியபடியால் இவர் மற்றொரு கிறீஸ்து என்றும் அழைக்கப்படுகிறார்.

இவர் ஏற்படுத்திய மூன்று சந்நியாச சபைகளினாலும் திருச்சபை அடைந்துவரும் நன்மைக்குக் கணக்கில்லை. இவரது மூன்று சபையையும் சேர்ந்த ஆயிரக்கணக்கான புனிதர்கள் திருச்சபையை அலங்கரிக்கின்றனர். அர்ச். பிரான்சீஸ்கு மிகவும் தாழ்ச்சியுள்ளவராகையால் அகங்காரத்தினால் கெட்ட லூசிப்பேரின் ஆசனம் மோட்சத்தில் இவருக்குக் கொடுக்கப்பட்டதாக ஒரு சந்நியாசி தரிசனத்தில் கண்டார்.

இவர் மரித்தநாளாகிய அக்டோபர் 4-ந் திகதியைத் திருச்சபை வெகு சிறப்பலங்காரமாகக் கொண்டாடுகிறது. நாமும் இவ் அர்ச்சியசிஷ்டவரிடம் பெருமை, செல்வம் முதலியவற்றைக் கேட்காமல், மனத்தாழ்ச்சியையும், பரலோக நன்மைகளையும் கேட்போமாக.

சகோ. ஜேம்ஸ் (ம. பி. ச.)


## திருச்செல்வம் & கோ.

### ஏஜண்டுகள்

- "நவ்பீல்ட்" யுனிவர்சல் டிராக்டர்கள்
- "ரேூம்" உழவு சாதனங்கள்
- "அல்கொன்" நீர்ப்பாசன இயந்திரங்கள்
- "ஹம்பர்" சைக்கிள்கள்
- "பை" வானொலிப் பெட்டிகள்
- "என். எஸ். யூ." மோட்டர் சைக்கிள்கள்

இன்னும் எம்மிடம்

துவக்குகள், தோட்டாக்கள், மின்சார உபபொருட்கள், சைக்கிள்கள், உப உறுப்புகள், கைத்தொழில் எந்திரசாதனங்கள், நீர் இறைக்கும் எந்திர உறுப்புகள் முதலியனவும் கிடைக்கும்.

தலைமைக் காரியாலயம்:
272, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

கிளைக் காரியாலயம்:
கண்டி வீதி,
கிளிநொச்சி.


# இவ்வளவு தாமதம் ஏன்?

பொதுச்சங்கத்தைக் கூட்டும் நோக்கத்தைப் பாப்பரசர்வெளியிட்டு மூன்று வருடங்களாகின்றன, எனினும் அது இன்னும் தொடங்குவதற்கு ஏன் இவ்வளவு தாமதம் என்று பலர் எண்ணக் கூடும். உண்மையாக மூன்று வருடங்கள் கடந்துவிட்டனதான். எனினும் பொதுச்சங்கம் கட்டாயம் இந்த வருடம் ஐப்பசி 11-ம் திகதி தொடங்கும்என்று பாப்பரசர் அறிவித்தார். ஏன் இவ்வளவு தாமதமெனில், கருதினால் மொன்ரீனியின் வார்த்தைகளிலே, "திருச்சபை தன் சரித்திரத்திலேயே கூடப்போகும் மிகப்பெரிய சங்கம் வரப்போகும் இரண்டாம் வத்திக்கான் சங்கம்தான். தொகையில் மாத்திரம் பெரியதல்ல, அதன் அவசியத்திலும் அதிமுக்கியமானதுதான். மேலும் உலகம் முன்னொருகாலம் கண்டிராதபடி உலகத்தின் சகல பாகங்களிலும் இருக்கும் மேய்ப்பர்கள் எல்லோரையும் ஒன்று சேர்க்கும். ஆகவே இவ்வளவு ஆயத்தம் செய்ய வேண்டியதாயிற்று. 2700 மேய்ப்பர்களுக்கும், பிதாக்களுக்கும், தங்கள் தங்கள் விருப்பம், கருத்து, பிரச்சனைகள் முதலியவற்றை வெகு தெளிவாக எழுதி அனுப்பும்படி பலகடிதங்கள் சென்றன. ரோமையின் பொதுச்சங்க காரியாலயத்திலிருந்து. இவற்றிற்கு மறுமொழியாக ஆயிரக்கணக்கில் பதில் கடிதங்கள்வந்து சேர்ந்தன. அவைகளைப் படித்து, ஆராய்ந்து, அவற்றின் பற்பல நோக்குகளை ஒன்றுதிரட்டப் பலமாதங்கள் சென்றன. இனி பொது சங்கம் தொடங்குவதற்கு நேரடியான நடவடிக்கைகள் தயாராகி முடிந்துவிட்டன. இவ்வளவு கரிசனை, இன்னல், செப, தபம் முதலியனவோடு கூடப்போகும் பொதுச்சங்கம் நிச்சயமாக வெற்றிகரமாக நடந்தேறித் தன் குறிக்கோள்களைக் கண்டடையும் என்பதில் அச்சமில்லை."

### வருந்துகிறோம்

இச் சிறப்பு மலருக்கென பல அன்பர்கள் விடயதானம் செய்திருந்தனர். இடமின்மை காரணமாக சிலவற்றை வெளியிட முடியாமைக்காக பெரிதும் வருந்துகிறோம்.

ஆசிரியர்.

துர்மாதிரிகை ஒரு முட்டையைப் போன்றது; அது பொரித்தவுடன் அதற்குச் சிறகுகள் வந்துவிடுகின்றன.

* * *

தாழ்ச்சி என்பது ஒரு நூதனமான விஷயம்; எந்த நிமிடம் அதை அடைந்திருப்பதாக நினைக்கிறாயோ, அந்த நிமிடமே அதை இழந்து போகிறாய்.

## செபஅப்போஸ்தலசபை

### ஐப்பசி — 1962

#### பொதுக்கருத்து

இரண்டாம் வத்திக்கான் சங்கம் திருச்சபையின் தவறுப்போதனை சக்தியினால் விசுவாசத்துக்கும், நேர்மை நெறிகட்கும் விளைவிக்கும் தவறுகள் அபாயங்கள் யாவற்றையும் வெளிப்படுத்த வேண்டிக்கொள்வது.

#### மிஷன் கருத்து

லத்தீன் அமெரிக்கரிடையே குருமார், சந்நியாசிகளல்லாத பாமர கத்தோலிக்க தொண்டர் ஆயத்தப்படுத்தப்பட மன்றாடிக்கொள்வது.

* * *

#### காலைக்காணிக்கைச் செபம்

யேசுவின் திருஇருதயமே, நாங்கள் கட்டிக்கொள்ளும் துரோகங்களுக்குப் பரிகாரமாகவும், தேவரீர் திருப்பீடத்தில் ஓயாமல் உம்மைத்தானே பலியாகஒப்புக்கொடுக்கும் சகல கருத்துகளுக்காகவும் அடியேன் இன்றுசெய்யும் செபங்களையும், கிரியைகளையும், படுந்துன்ப வருத்தங்களையும் அர்ச்சியசிட்ட கன்னிமரியாயின் மாசில்லாத இருதயத்தின்வழியாக, உமக்கு ஒப்புக்கொடுக்கிறேன். விசேஷமாகச் சபையாருக்குக் குறிக்கப்பட்ட சகல கருத்துகளுக்காகவும், பரிசுத்த பாப்பரசர் இம்மாதத்துக்கென நியமித்த கருத்துகளுக்காகவும் அவைகளை ஒப்புக்கொடுக்கிறேன்.

#### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

யேசுவின் திருஇரக்கத்தாலும் சதா சகாயமாதா, அர்ச். அந்தோனியார் அர்ச். யூதாததேயு இவர்களின் மன்றாட்டினாலும் பலமாதங்களாக எனக்கிருந்த வயிற்றுநோய் குணமாகிவிட்டது. இன்னும் பூரணசுகமடையப் பிரார்த்திக்கிறேன். பிரசுரிக்கத் தாமதயாகியதற்கு மன்னிப்புக்கோரி நேர்த்தியின்படி பிரசுரிக்கிறேன்.

இ. ஜே. லெ.

பேசாலை

இந்த மந்தைக்குச் சேராத வேறு ஆடுகளும் உண்டு; அவைகளும் இங்கு கொண்டுவரப்படுதல் வேண்டும். அரு. 10 : 16

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உல்லாசவேளை

நமது நிருபர் அமலன்

# பொதுச்சங்கம் எவ்விதம் இயங்கும்?

- தந்தையின் அழைப்பு
- ஆயர்களின் மதிப்பு
- நிர்வாக உழைப்பு
- ஆலயச் சிறப்பு
- ஆசன அமைப்பு
- ஒலி பரப்பு
- ஒளிப்பெருக்கு
- வாக்கெடுப்பு

அம்மா: நாங்கள் ஆவலுடன் பார்த்திருந்த வத்திக்கான் சங்கம்கூடும் காலம் நெருங்கிவிட்டதல்லவா?

அன்ரன்: ஆம், அம்மா. அடுத்த வாரம் 11-ந்தேதி வத்திக்கான் நகரில் சங்கத்தைக் கூட்டுவார்கள்.

கார்மெலா: ஆனபடியால் இன்றைக்கு எங்கள் சல்லாபம் சங்கத்தைப் பற்றியதாகவே இருக்கும். சரிதானே?

அன்ரன்: எல்லாரும் எதிர்பார்த்ததுதான். சங்கம் நடைபெறப்போகும் இராயப்பர் தேவாலயத்தின் படத்தைப் பாடசாலையில் ஆசிரியர் காட்டினார். உலகத்திலேயே பெரிய தேவாலயமாமே.

பெரியண்ணா: உலகிலேயே பெரிய தேவாலயம் என்பது மட்டுமல்ல, மகாலயம் என்ற வரிசையில் உயர்ந்த மகாலயம் என்ற கௌரவமும் அதற்குண்டு.

அகஸ்ரின்: இராயப்பரின் கல்லறையின்மேல் இக்கோவில் எழுப்பப்பட்டிருக்கிறது.

அப்பா: இராயப்பர் என்ற கற்பாறையின்மீதுதானே நமதாண்டவர் திருச்சபையைக்கட்டினார். ஆகவே, திருச்சபையின் அத்திவாரம் என்ற பெருமையும் அதற்குண்டல்லவா?

அஞ்சலா: நீங்கள் என்ன பேசாமலிருக்கிறீர்கள். உங்கள் பிரயாணத்தின்போது ரோமுக்கும் சென்றீர்களல்லவா?

அன்ரன்: சின்னத்தான் இராயப்பர் தேவாலயத்தைப்பற்றித் தெரிந்தமட்டும் சொல்லுங்கள்.

இயூஜின்: இந்தக் கோவிலின் நீளம் ஒரு பேர்லாங். உயரம் 450 அடிக்குமேல். பிரபல சிற்பிகளின் கைவண்ணம் ஆலயம் முழுவதிலும் காணக்கிடக்கிறது. ஒவ்வொரு சிற்பியும் தன் திறமைகள் முழுவதையும் பிரயோகித்து உயிரோவியங்கள் பலவற்றை வரைந்திருக்கின்றனர். கலையழகுநிரம்பிய சிற்பங்களைச் செதுக்கியிருக்கின்றனர்.

நிர்மலா: ஓவியநிபுணர் மைக்கல் அஞ்சலோதானே இவ்வாலயத்தைத் திட்டமிட்டுக் கட்டிமுடித்தவர்.

அகஸ்ரின்: ஆம். அவருக்குமுன்னரே பல சிற்பிகள் செயலாற்றியிருக்கின்றனர். ஆயினும் மைக்கல் அஞ்சலோ சகல வேலைகளையும் இணைத்துச் சிறப்பானதோர் தேவாலயத்தை அமைத்து முடித்திருக்கிறார்.

கார்மெலா: அமெரிக்க கர்தினால் ஸ்பெல்மன் ஆண்டகை நியூயோர்க் பொருட்காட்சிக்காகக் கொண்டுபோகவிருக்கும் மரியன்னையின் சொரூபமும் அங்குதானே இருக்கிறது.

இயூஜின்: ஆம். தேவ அன்னையின் எழிலோவியம் இது. எத்தனை நாள் வேண்டுமாயினும் பார்த்துக்கொண்டேயிருக்கலாம். பசியோ, அலுப்போ தோன்றாது. மைக்கல் அஞ்சலோ தயாரித்த பல சிற்பங்களைப் பிற ஓவியர் பலர் தங்களுடையதெனச் சொல்லிக்கொண்டனர். எனவே, இச்சிற்பத்தை வெள்ளைச் சலவைக்கல்லில் தயாரித்த அஞ்சலோ அன்னையின் பாதத்தில் தமது கையெழுத்தையும் பொறித்துவிட்டார். உலகின் உன்னத சிற்பியொருவரின் கையெழுத்தோடு இருப்பதால் இச்சிலையின் மதிப்பு மிக அதிகமாகிவிட்டது.

அப்பா: இராயப்பர் மகாலயத்தில் ஏராளமான பீடங்கள் இருக்கிறதாமே?

இயூஜின்: ஆம். எல்லாமாக 44 பீடங்கள் இருக்கின்றன. நடுப்பீடத்தில் இராயப்பரின் விசுவாச உச்சாடனம் உண்டு. திவ்யநற்கருணை இங்கு வைக்கப்படுவதில்லை. பக்கத்திலுள்ள சிற்றாலயமொன்றில் பொது ஆராதனைக்காகத் திவ்வியநற்கருணை வைக்கப்பட்டுளது.

அம்மா: இராயப்பர் தேவாலயத்தின் சிறப்பை மாத்திரம் பேசிக்கொண்டிருந்தால்போதுமா? மற்ற விஷயங்களைப்பற்றியும் பேசுங்கள்.

அன்ரன்: அம்மாவின் உத்தரவு. எங்கள் நாட்டில் பொதுக்கூட்டங்களுக்குப் போலத்தானே இங்கும் ஆசனவசதிகள் இருக்கும்.

அகஸ்ரின்: இராயப்பர் மகாலயத்தின் நடுமண்டபத்தில் சங்கத்துக்கான இருக்கைகள் அமைக்கப்பட்டுள்ளன. தேவாலயத்தின் நடுவே போதிய இடைவெளிவிட்டு இருபக்கத்திலும் பீடத்திலிருந்து முகப்புவரை நீளமாக ஆசனங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இராயப்பரின் பீடத்தடியில் தொடங்கும் இந்த ஆசனத்தொடர் முகப்புக் கதவுகளிலிருந்து பத்தடி தூரம்வரை நீண்டுளது.

அஞ்சலா: இந்த ஆசனங்களில் நீண்டநேரம் அமர்ந்திருப்பது கஷ்டமல்லவா?

பெரியண்ணா: ஆகாயவிமானங்களில் பிரயாணிகட்காகச் சொகுசான ஆசனங்கள் உண்டல்லவா. பொதுச்சங்க பிதாக்களுக்கெனவும் அசைந்துகொடுக்கக்கூடியதான இவ்வித இருக்கைகள் பொருத்தப்பட்டுள்ளன. தரைமட்டத்திலிருந்து வரிசைவரிசையாக ஆசனங்கள் உயர்ந்து செல்லும். விளையாட்டு மண்டபங்கள் போல என்று குறிப்பிடலாம்.

கார்மெலா: ஆசனங்கள் மட்டும்தானா. எழுத்துப்பீடம் எதுவுமில்லையா?

அகஸ்ரின்: இருக்கிறதே. ஒவ்வொரு ஆசனத்தின் முன்னரும் முழந்தாளிட சிறுமுட்டு ஒன்று உளது. எழுத்துப்பீடம் ஒன்று தேவையான நேரத்தில் பொருத்தவும் பின்னர் ஒரு கருவியை அழுக்கியவுடன் சாய்ந்து நிற்கவும் கூடியதாக அமைக்கப்பட்டுளது.

நிர்மலா: பாப்பரசர் எங்கே அமர்ந்திருப்பார்?

பெரியண்ணா: பிரதான பீடத்தின் பக்கமாகப் பொதுச்சங்க பிதாக்களை நோக்கியவண்ணம் பாப்பரசரின் ஆசனம் அமைந்துளது. ஆசனம் மிக உயரமாக அமைந்திருப்பதால் சங்கத்தில் பங்குபற்றுகிறவர்கள் அனைவரும் பரிசுத்த தந்தையைப்பார்க்க இயலும். இவ்வாசனம் தேவையானபோது அகற்றக்கூடியவிதமாகத் தற்காலிக ஆசனமாகவே உளது.

அஞ்சலா: மற்றவர்களின் இடங்களைப்பற்றியும் சொல்லுங்கள்.

அகஸ்ரின்: பாப்பரசரது ஆசனத்தின் வலது பக்கத்தில் கர்தினால்மாருக்கான இருக்கைகள் உண்டு. அவர்கட்குப் பக்கத்தில் … ஒன்பதுபேரின் ஆசனங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

அப்பா: எங்கள் மேற்றிராணியாரும் மற்றைய ஆயர்களும் நீங்கள் கூறிய நீளமான வரிசைகளில் அமைக்கப்பட்ட ஆசனங்களில் அமர்ந்திருப்பார்களா?

பெரியண்ணா: ஆம். 2,300 ஆசனங்கள் மேற்றிராணிமாருக்கென ஒதுக்கப்பட்டுள்ளன. இவ்வரிசைகளின் மேல்பக்கமாக மேலும் 360 ஆசனங்கள் உண்டு. இல்லறத்தவர்களான பேரறிஞர்கள், சட்டவல்லுநர்கள், மேற்றிராணிமார்களின் ஆலோசகர்கள், அல்லது சமுகமளிக்க இயலாத மேற்றிராணிமார்களின் பிரதிநிதிகள் என்போருக்காக இவ்வாசனங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

அன்ரன்: பார்வையாளர்கள், பத்திரிகையாளர்கள் முதலியவர்கட்கு ஆசனங்கள் எங்கேஉளது.

இயூஜின்: யான் ரோமாபுரியில் இருந்தபோது இவர்கட்கான ஆசனங்களை அமைக்கும்பணியில் பல அதிகாரிகளும் தொழிலாளிகளும் ஈடுபட்டிருந்தனர். பிரதான பீடத்தின் நான்குமூலைகளும் நான்கு பகுதிகளாக உயரமான ஆசனவசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பகுதிகட்கும் தனித்தனி நாமங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

கார்மெலா: எதற்காக தனிப்பெயர்கள்?

இயூஜின்: பொதுச்சங்கத்துக்குச் செல்லும் ஒவ்வொருவருக்கும் அடையாளச்சீட்டுகள் கொடுக்கப்படும். இடங்களை மாறுமல் இருப்பதற்கே இந்த ஏற்பாடு. பாப்பரசரின் வலது பக்கத்திலுள்ள மூலை புனித அன்ரூ பெயரால் அழைக்கப்படும். அங்கு சங்கத்துக்கென உலக அரசுகள் அனுப்பும் பிரதிநிதிகள் தங்குவர். புனித லோங்கினுஸ் பகுதியில் வத்திக்கானில் உள்ள பிறதேசகாரியாலய அதிகாரிகள் அமர்வர். பாப்பரசரின் இடதுபக்கத்திலுள்ள மூலையில் சங்க நடவடிக்கைகள்பற்றி அகில உலகுக்கும் அறிவிப்போர் தங்குவர். இது புனித கெலனபகுதியென அழைக்கப்படும். பக்கத்திலுள்ள புனிதை வெரோனிக்கா பகுதியில் வானொலி, தொலைக்காட்சி அறிவிப்பாளர்கள், இயக்குநர்கள், எந்திர நிபுணர்கள் முதலியோர் அமர்வர்.

> ## ஒரு வேண்டுகோள்
>
> இச் சிறப்புமலர்பற்றிய நேயர்களின் அபிப்பிராயங்களை எதிர்நோக்குகிறோம்.
>
> **நிர்வாக ஆசிரியர்,**
> ச. வே. பாதுகாவலன்,
> மேற்றிராசன இல்லம்,
> யாழ்ப்பாணம்.

அப்பா: சங்க நடவடிக்கைகளை யாவரும் கிரகிக்கும்வண்ணம் ஒலிபரப்பு ஏற்பாடுகள் அமைக்கப்படுமல்லவா?

அகஸ்ரின்: வத்திக்கானின் ஒலிபரப்பும் ஏற்பாடுகள் உலகப்பிரசித்தி பெற்றவை. தற்போது பலபுதிய முறைகளையும் கையாண்டு சிறப்பான ஏற்பாடுகளைச் செய்திருக்கிறார்களாம். ஒவ்வொரு இருவரிசையின் ஆறு ஆசனங்கட்குமென ஒருஒலிவாங்கும் எந்திரம் நிறுவப்பட்டுள்ளது. இந்தப் பன்னிரண்டு ஆசனங்களிலுமிருப்பவர்கள் பேசவிரும்பும்போது இந்த ஒலிவாங்கியின் பக்கத்திற்சென்று உரையாற்றுவர். ஒவ்வொரு ஆசனத்தின் முன்பாகவும் சிறு ஒலிபெருக்கியொன்றுண்டு. சங்கநிகழ்ச்சிகளைத் தன்முன்னல் அமர்ந்திருப்பவருக்கு இது தெளிவாக அறிவிக்கும்.

அம்மா: வெளிச்சவசதிகள் எப்படியிருக்கும்?

இயூஜின்: சாதாரண காலங்களிலேயே இராயப்பர் தேவாலயத்தில் பலவிளக்குகளைப் பொருத்தியிருப்பார்கள். விசேட வைபவங்களில் வர்ண விளக்குகளின் அலங்கரிப்பு மிகப் பிரமாதமாக இருக்கும்.

பெரியண்ணா: சங்க நடவடிக்கைகட்கு வெளிச்சவசதிகள்தானே முக்கியம். அதிகபிரகாசமுள்ள மேர்க்ரி விளக்குகளையெல்லாம் மண்டபத்தில் பொருத்தியிருக்கிறார்களாம். இதைத் தவிர, தனிப்பட்டவெளிச்சம் தேவைப்படுவோருக்கும் விளக்குத்தம்பங்கள் பொருத்தப்படும்.

கார்மெலா: சங்க நிகழ்ச்சிகட்குப் பாப்பரசர்தானே தலைமை வகிப்பவர்.

அகஸ்ரின்: பொதுவாக சங்கத்தின் தலைவர் பாப்பரசரே. ஆயினும ஒவ்வொரு நிகழ்ச்சிகட்கும் ஒரு கர்தினால் தலைமைவகிப்பார். இவருக்கெனப் பாப்பரசரின் ஆசனத்துக்கு முன்பாக சற்றுப் பதிவாக ஒரு ஆசனம் உண்டு. இதன் பக்கமாக நீண்டஎழுத்துப் பீடத்தில் காரியதரிசி மற்றும் குழு அங்கத்துவர் முதலியோர் அமர்வர்.

பெரியண்ணா: பரிசுத்த தந்தை அமரும இருக்கையின் இடதுபுறமாகப் பிரசங்க பீடம் ஒன்றுளது. இங்கு ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் முன்னுரை நிகழ்த்துவோர், நீண்ட சொற்பொழிவுகள் செய்வோர் வந்து உரையாற்றுவர். அதற்குப்பின்னுல் ஒருஉயரிய பீடத்தில் புனித இராயப்பரின் வெணகலச் சொரூபம் உண்டு. பீடத்தில் வேதாகம புத்தகம் திறந்தவண்ணம் வைக்கப்பட்டிருக்கும்.

நிர்மலா: ஒவ்வொரு நாளும் திவ்விய பூசைபோன்ற பிரதான வைபவங்கள் நிகழுமா?

அகஸ்ரின்: இல்லை. பிரதான சடங்குகளின்போது பாப்பரசரின் எழுத்துப்பீடம், காரியக்குழுவினரின் நீண்ட மேசை முதலியன அகற்றப்படும். தினசரி அதிகாலையில் எல்லாஆயர்களும் திவ்வியபூசை நிறைவேற்றுவார்களாதலால் சங்கத்துக்காகப் பொதுப் பூசைகள் வைக்கப்படமாட்டா.

அப்பா: நீண்டநேரம் அமர்ந்திருக்கும் ஆயர்கட்கு இளைப்பாற்றி வசதிகள் உண்டா?

பெரியண்ணா: மகாலயத்தின் இருபக்கத்திலும் இருபானசாலைகள் நிறுவப்பட்டிருக்கின்றன. அலுப்புற்ற அல்லது ஆயாசமுற்றஆயர்கள் இங்குவந்து சிறிது இளைப்பாறிக்கொண்டு மீண்டும் சங்க நடவடிக்கைகளில் கலந்துகொள்ளச்செல்வர். இங்கும் ஒலிபரப்புவசதிகள் உண்டாதலால், ஆயர்கள் களைப்பாறும்போதும் சங்கநிகழ்ச்சிகளில் அவர்களின் மனம் ஈடுபட்டிருக்கும். பானசாலைகளில் சூடானகாப்பிப்பானமும் அளிக்கப்படும்.

அஞ்சலா: சங்க ஊர்வலங்களில் தம்மால் பங்குபற்ற இயலாதென ஒரு மேற்றிராணியார் கூறியதாகப் பாதுகாவலனில் சென்றவாரம் காணப்பட்டதே. அப்படியானுல் ஊர்வலங்களும் உண்டா?

(தொடர்ச்சி 10-ம் பக்கம்)

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20 Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Saturday October 6-1962

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org